விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 17.05.2021 திங்கட்கிழமை | இதழ் : 166 | பக்கங்கள் : 16

# உடன் தேவைப்படும் அஸ்ட்ராசெனெகாவை பெறுவதற்கான முயற்சியில் பலனற்ற நிலை

## பிரிட்டன், தென்கொரியா, கொங்கோ உட்பட பல நாடுகளுடன் இலங்கை அவசர பேச்சு

கொழும்பு, மே 17

இரண்டாவது கட்டமாகச் செலுத்துவதற்காக உடனடியாகத் தேவையாகவுள்ள ஆறு லட்சம் அஸ்ட்ராசெனெகா தடுப்பூசிகள் இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கும் என கொழும்பு மேயர் ரோசி சேனநாயக்க தெரிவித்திருந்தபோதிலும், நேற்றிரவு வரையில், இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தல் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர், இந்தத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும், இருந்த போதிலும் தாமதமின்றி இரண்டாவது கட்ட தடுப்பூசியை மக்களுக்கு வழங்குவதற்காக அதனைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியை அரசு

15

# ஜூனில் அதியுச்சமடையும் புதிய கொரோனா வைரஸ்

## இலங்கை கதிகலங்கும் என்று வைத்திய நிபுணர் எச்சரிக்கை



கொழும்பு, மே 17

இலங்கையில் புதிய கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் ஜூன் மாதமளவில் மேலும் தீவிர மடையலாம் என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பெண்ணோயியல் மற்றும் மகப்பேற்று கற்கைப் பிரிவு பேராசிரியர் வைத்திய நிபுணர் ஹேமந்த சேனாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

15

# தினமும் எகிறும் தொற்றாளர்கள்

## நேற்றும் 2,275 பேர் அடையாளம்

கொழும்பு, மே 17

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 275 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில்

15

# இலங்கைக்கான தடுப்பூசிகள் சீனாவின் அறிவிப்பு விரைவில்

## தூதரகம் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தி

கொழும்பு, மே 17

இலங்கைக்கான கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் தொடர்பான முக்கிய அறிவிப்புகள் அடுத்த சில வாரங்களில் வெளியாகும் என சீனா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு

15

# தூர இடங்களுக்கான பஸ், ரயில் சேவைகள் தொடர்ந்தும் நிறுத்தம்

கொழும்பு, மே 17

இலங்கையில் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் தொடர்வதால், தூர இடங்களுக்கான பஸ், ரயில் போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்தும் நிறுத்தப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி முதல் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதே வேளை, கடந்த 13ஆம் திகதி இரவு முதல் நாடு பூராகவும் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடு இன்று அதிகாலை முதல் தளர்த்தப்

15

# தமிழருக்கு நீதியை பெற்றுக்கொடுக்க ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்

## கனடா ஒன்ராறியோ சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதி

ரொறன்ரோ, மே 17

"தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைக்கும், இன்றுவரை இடம்பெறுறு வரும் கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைக்கும் நீதியை பெற்றுக்கொடுத்து

15

# மட்டக்களப்பிலும் நினைவேந்தலுக்குத் தடை

## 22 பேருக்கு நேற்று தடை உத்தரவுக் கடிதங்கள்

மட்டக்களப்பு, மே 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்துவதற்கு இந்நாள், முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 22 பேருக்குத் தடை உத்தரவு

15

# சட்டமா அதிபரின் கருத்து பற்றி சி.ஐ.டியின் அறிக்கை வேண்டும்

## அமைச்சர் வீரசேகர கோரிக்கை

கொழும்பு, மே 17

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு எதிரான விசாரணை அறிக்கைகள் முழுமையற்றவை என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில்

15

# கொரோனாவுக்கு 21 பேர் நேற்று பலி

கொழும்பு, மே 17

கொரோனா தொற்று காரணமாக நேற்றைய தினம் 21 பேர் மரணமாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் இலங்கையில் கொரோனாவினால் மரணமானோரின் தொகை 962 ஆக அதிகரித்துள்ளது.

# யாழில் 9 பேர் உட்பட வடக்கில் 55 பேருக்கு நேற்று கொரோனா

## புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் 20 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 பேர் உட்பட வட மாகாணத்தில் மேலும் 55 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 642 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பேரும் வவுனியா மாவட்டத்தில் மன்னார் மாவட்டத்தில்

15



## இப்படியும் நடக்கிறது...!

ஒரு நாட்டின் அரசனுக்கு வயதாகிக் கொண்டிருந்தது. தலைமுடி கொட்டி வழுக்கை அதிகமாகிக் கொண்டிருந்தது. அரசனுக்கு தன் கம்பீரம் குறைந்து விடும் என்ற கவலை அதிகமாகிப் போய் ஒரு நாள் அரசவைத் தலைமை மருத்துவனிடம் நிவாரணம் கேட்டான்.

தலைமை மருத்துவன் "மன்னா! இதற்கு மருந்தே கிடையாது" என்று உண்மையைச் சொன்னான். அரசனுக்கு அந்த பதில்பிடிக்கவில்லை. கோபமடைந்தான். ஆத்திரம் தலைக்கேறி தலைமை மருத்துவனை சிறையில் அடைக்குமாறு உத்தரவிட்டான்.

ஊரில் இருக்கும் அனைத்து சிறந்த மருத்துவர்களையும் வரவழைத்தான். ஒரே வாரத்தில் தன் பிரச்னைக்குத் தீர்வு கண்டு பிடிக்குமாறு பணித்தான்.

தீர்வு சொல்லாவிட்டால் அரசவை மருத்துவனுக்கு நடந்தது தான் தமக்கும் நடக்கும் என்பது அவர்களுக்கு தெரியாததல்ல.

மருத்துவர்கள் அனைவரும் கூடி விவாதித்தனர். அரசனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்றுதான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு துடிப்பான இளைஞன் இருந்தான். பிரச்னைக்குத் தன்னிடம் தீர்வு இருப்பதாகக் கூறினான். அனுபவம் முதிர்ந்த வயதான மருத்துவர்கள் கூட்டத்தில் இருந்தனர். அவனைப் பார்த்து சிரித்தனர். "வழுக்கைக்குத் தீர்வா?" என்று ஏளனமாகக் கூறினர்.

நாள் செல்லச் செல்ல மருத்துவர்களுக்கு அரசனிடமிருந்து தப்பிக்கும் வழி தெரியவில்லை. அப்போது இளைய மருத்துவன் திரும்பவும் "என்னை நம்பினால் நம் எல்லோருக்கும் விடிவு நிச்சயம்" என்று கூறினான்.

வேறு வழியில்லாமல் அனைவரும் அவன் வழியில் செல்ல ஒத்துக் கொண்டார்கள். அவனோ, மருந்தை நேரடியாக அரசனிடம்தான் தருவேன், என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

அடுத்த நாள் சபை கூடியது. மருத்துவர்கள் இளைய மருத்துவனைக் கூட்டிக் கொண்டு அரசவைக்கு வந்தார்கள்.

அவன் அரசனிடம் ஒரு குடுவையைக் கொடுத்தான். "மன்னா இதில் இருக்கும் மருந்தை தினமும் தலையில் தேய்த்துக்கொண்டு வந்தால், ஒரே மாதத்தில் முடி கொட்டுவது நின்று போகும். இரண்டே மாதத்தில் முடியில்லாத இடத்திலெல்லாம் முடி வளர ஆரம்பிக்கும், ஆறே மாதத்தில் கருகருவென தலையெங்கும் தலைமுடி அழகாக வளர்ந்திருக்கும்" என்றான்.

மன்னனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

அப்போது மருத்துவன் "மன்னா. இந்த மருந்து வேலை செய்ய வேண்டுமென்றால், அதைத் தலையில் தடவிக் கொள்ளும் போது மட்டும் நீங்கள் குரங்கை நினைக்கக் கூடாது!" என்றான். மன்னன் சரியென்று சொன்னான். மந்திரியிடம் மருத்துவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து சிறப்பாக மரியாதை செய்து அனுப்பி வைக்கச் சொல்லிவிட்டு அந்தப்புரத்திற்கு வேகமாகச் சென்று விட்டான். மருத்துவர்களும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஊரை விட்டே ஓடி விட்டார்கள்.

அந்தப்புரத்திற்குச் சென்ற அரசன், அங்கு குடுவையைக்கையில் எடுத்து அதிலிருந்த மருந்தைத் தலையில் தேய்க்கப் போனான். அப்போது அவனுக்கு மருத்துவன் சொல்லிய பக்குவம் கவனத்திற்கு வந்தது. "குரங்கை நினைக்கக் கூடாது" என்று நினைத்தவுடன் குரங்கைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விட்டான். என்ன முயற்சித்தும் அவன் நினைவிலிருந்து குரங்கை அகற்ற இயலவில்லை. சற்று நேரம் கழித்து முயற்சிப்போம் என்று வேறு வேலையில் ஈடுபட்டான். ஆனால் ஒவ்வொரு முறை அவன் மருந்தைக் கையில் எடுத்த போதும் மருத்துவனின் அறிவுரை மனதில் தோன்றி அவனுக்குக் குரங்கு பற்றிய யோசனை வந்து கொண்டே இருந்தது.

பல நாள் திரும்பத் திரும்ப முயற்சித்து விட்டு, இந்தச் சிரமத்திற்குப் பேசாமல் வழுக்கையாகவே இருந்து விடலாம் என்று தீர்மானித்து விட்டான்.

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வாழ்க்கையில் முள்ளிவாய்க்கால் என்பது தவிர்க்கமுடியாத ஒன்று.

அந்தப் பேரவலம் மறக்கவோ அல்லது மறைக்கவே கூடிய ஒன்றல்ல.

முள்ளிவாய்க்கால் நினைவை தமிழ்மக்கள் மனங்களிலிருந்து நீக்கிவிடலாம் என்று யார் நினைத்தாலும் அது சாத்தியப்படப் போவதில்லை.

தற்போது நாட்டை உலுக்கி எடுத்துக்கொண்டிருக்கும் கொரோனா தொற்றுக்கு மத்தியில் அந்த நினைவு வைபவத்தை நடத்துவதென்பது சிரமமானதுதான்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை முள்ளிவாய்க்கால் நினைவுகளை தமிழர் மனங்களிலிருந்து நீக்கவிடவேண்டும் என்ற விருப்பம் இருப்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

இந்நிலையில் இந்த அரசாங்கம் தான் விரும்பாத ஒன்று நடப்பதை, இந்த கொரோனாவை காரணம்காட்டி தடுக்க முயலும் என்பதும் தெரிந்த சங்கதிதான்.

இந்நிலையில், அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து தமிழ் மக்கள் சார்பில் சிந்திக்க ஒரு தலைவரும் தமிழர் மத்தியில் இல்லை என்பதுதான் இன்று கவலை தரும் விடயம்.

இந்த நினைவு நாளை எப்படி எதிர்கொள்வது என்பதை கத்தோலிக்க ஆயர்கள் வழிகாட்டவேண்டிய நிலையில்தான் இன்று தமிழ் அரசியல் தலைமை இருக்கின்றது. முள்ளிவாய்க்காலில் புதிய நினைவுக்கல்லை வைக்க மூன்று அருட்பணியாளர்கள் செல்கிறார்கள். அதனை அவர்களே முடிவெடுக்கிறார்கள். செய்தியாக்குகிறார்கள்.

முள்ளிவாய்க்கால் நினைவு என்பது இன்று முள்ளிவாய்க்கால் அவலத்தை விட பெரிய அவலமாக ஆகியிருக்கின்றது. இப்போது தமிழ் மக்களது தேவை எல்லாம் அந்த அரசனுக்கு மருந்து சொன்ன இளம் மருத்துவரைப்போன்ற ஒரு சிறந்த தலைவர்தான்.

**- ஊர்க்குருவி.**

# அபாயத்தின் உச்சத்தைத் தொட்ட கம்பஹா மாவட்டம் 80 வீதமான தடிமன் நோயாளர்களுக்குக் கொரோனா

**கொழும்பு, மே 17**

**கம்பஹா மாவட்டத்தில் எதிர்வரும் இரு வாரங்களில் எதிர்பார்க்காதளவுக்கு கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கும் சாத்தியம் எழுந்துள்ளது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**



நீர்கொழும்பு வைத்தியசாலைக்குச் சிகிச்சைகளுக்காக வருகை தந்த தடிமன் நோய் அறிகுறிகள் காணப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட அன்டீஜன் பரிசோதனைகளில், 80 வீதமானோருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷேனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த அபாயகரமான நிலைமையால், கம்பஹா மாவட்டத்திலுள்ள வைத்தியசாலை கட்டமைப்பு பாதிப்புக்களை எதிர்நோக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த அபாயகரமான நிலைமையை எதிர்கொள்வதற்கான திட்டங்கள் உடனடியாக வகுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், கம்பஹா மாவட்டத்தில் பாரதூரமான பாதிப்புக்கள் இல்லாத கொரோனா வைரஸ் தொற்றாளர்களை அவர்களின் வீடுகளிலேயே வைத்து சிகிச்சைகளை வழங்கும் நடைமுறையை ஏற்படுத்த வேண்டும் எனவும் வைத்தியர் ஷேனால் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் கடமையாற்றும் வைத்தியர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளிடமிருந்து நாளாந்தம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"தற்போது எழுந்துள்ள இந்த அபாயகர நிலைமை குறித்து தாம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தை தெளிவூட்டியுள்ளோம். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராட்ச்சி ஆகியோரையும் தெளிவூட்ட எதிர்பார்த்துள்ளோம்" எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

# கொவிட்-19

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை பாதுகாக்க விசேட அக்கறை செலுத்தும் என எதிர்பார்க்க முடியாது. எனவே கோவிட் 19 பேரழிவுத் தொற்று வேகமாக பரவி வரும் நிலையில் பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைமையாய் எமது மக்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் எமக்குண்டு.

இந்நிலையில் முள்ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினூடாக இனவழிப்புக்கான நீதியை வேண்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில், இனவழிப்பின் சாட்சியங்களாய் எமது ஆத்மாவை தினமும் உலுப்பிக்கொண்டிருக்கும் கொடூரமான இனவழிப்புச் சம்பவங்களை நினைந்து கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதிநாளான 2021-05-18 ஆம் திகதி பொது இடங்களிலும், இல்லங்களிலும் ஒன்றுசேர்வதைத் - ஒன்றுகூடுவதைத் தவிர்த்து கோவிட் 19 பரவல் தடுப்பு விதிமுறைகளுக்கு அமைவாக முகக்கவசங்கள் அணிந்து சமூக இடைவெளியைப் பேணியவாறு ஒவ்வொருவரும் தனித்தனியாக விளக்கேற்றியும் அஞ்சலிக்குமாறு கோருகின்றோம். அத்துடன் முள்ளிவாய்க்காலில் எமது மக்கள் அனுபவித்த பட்டினிச் சாவை நினைவு கொள்ளும் வகையில் கஞ்சியினை பரிமாறி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவுகூரும் இவ் வரலாற்றுக் கடமைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு எமது மக்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

ஓரிடத்தில் ஒன்று கூடி நினைவேந்துவதே எமது கூட்டுரிமையாகும். எனினும் இம்முறை கொவிட் 19 ஆபத்து நிலையில் ஓரிடத்தில் ஒன்று கூடுவதிலுள்ள ஆபத்தினை கருத்திற் கொண்டு தனித்தனியாக நினைவேந்தலை மேற்கொண்டாலும், இந்நினைவு கூரல் நிகழ்வுகள் மூலமான கூட்டுப் பிரக்ஞையை வெளிப்படுத்தும் முகமாக அவற்றை சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் பகிர்ந்து கொள்ளுமாறும் அன்புரிமையுடன் வேண்டுகின்றோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக கைதிகளைப் தொடர்புகொள்ள வாய்ப்பு

## உறவினர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம்

கொழும்பு, மே 17

காணொளி தொழில்நுட்பத்தினூடாக தமது உறவினர்களைத் தொடர்புகொள்வதற்கான வசதியை சிறைக் கைதிகளுக்கு மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலால் உறவினர்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் சிறைக்கைதிகளுக்குத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.prisons.gov.lk எனும் இணையத்துக்குப் பிரவேசித்து, அதில் பதிவு செய்வதனூடாகக் கைதிகளை உறவினர்கள் தொடர்புகொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உறவினர்களுடன் காணொளி மூலம் தொடர்புகொள்ள கைதி ஒருவருக்கு வாரத்துக்கு15 நிமிடங்கள் எனும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (இ)

கல்வி TV CHANNEL-1

காலை

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

பகல்

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu
17.05.2021 திங்கட்கிழமை
சார்வரி, வைகாசி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# அரசாங்கத்தை விரும்பும் தமிழ் தேசியவாதிகள்

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி சிதைக்கப்பட்டமை தொடர்பில் களத்திலிருந்தும், புலத்திலிருந்தும் ஏராளமான கண்டன அறிக்கைகள் வெளியாகியிருந்தன. இதில் கூட்டமைப்பினரின் அறிக்கைகள் விதிவிலக்கானவை, ஏனெனில், அவர்கள் மிகவும் வெளிப்படையாகவே ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தை எதிர்த்து செயற்பட்டவர்கள். ராஜபக்ஷக்கள் மீளவும் அதிகாரத்திற்கு வந்துவிடக்கூடாதென்று இறுதிவரையில் போராடியவர்கள்.

ஜனாதிபதி தேர்தலின்போது, மிகவும் வெளிப்படையாகவே கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து செயற்பட்டவர்கள். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக, கோட்டாபய ராஜபக்ஷ கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஒருவருடன் பேசியுமிருந்தார். கூட்டமைப்பின் ஆதரவை பெறுவதற்கான ஆலோசனையும் கேட்டிருந்தார் ஆனால், கூட்டமைப்பினரோ அவரை கண்டுகொள்ளவில்லை. சஜித் பிரேமதாசவை பெற்றிபெறச் செய்ய வேண்டுமென்பதிலேயே குறிக்கோளுடன் செயற்பட்டனர். ராஜபக்ஷக்கள் மீளவும் ஆட்சிப்பீடமேறினால், நல்லாட்சி அரசாங்கத்தில் அனுபவித்த விடயங்கள் அனைத்தையும் மக்கள் இழக்கநேரிடும் என்பதே கூட்டமைப்பின் பிரச்சாரமாக இருந்தது. இந்த பின்புலத்தில் நோக்கினால், கூட்டமைப்பின் சார்பில் வெளியான அறிக்கைகள் ஆச்சரியமானவையல்ல.

ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்கினேஸ்வரனின் அறிக்கை சற்று ஆச்சரியமானது. முக்கியமாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கண்டன அறிக்கைகள் மிகுந்த ஆச்சரியத்துக்குரியவை. ஏனெனில், கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, தேர்தலை பகிஷ்கரிக்குமாறு முன்னணியினர், மக்களை கோரியிருந்தனர். இது, 2005இல், விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்ட செயற்பாட்டுக்கு இணையானது. போர் நிறுத்தம் தொடர்வதை ஏதோவொரு வகையில் முடிவுக்கு கொண்டுவரவேண்டுமென்று எண்ணிய விடுதலைப் புலிகளின் தலைமையானது, அவ்வாறானதொரு முடிவை எடுத்திருந்தது. அந்த முடிவின் விளைவு மிகவும் தெளிவானது. அதாவது, மேற்குலகின் ஆதரவை பெற்றிருந்த ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிப்பதாகும். புலிகள் எதிர்பார்த்ததுபோன்றே, தமிழ் மக்களின் வாக்குகளை இழந்ததால், விக்கிரமசிங்க தேர்தலில் தோல்வியடைந்தார். மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றார். எனவே, தேர்தல் பகிஷ்கரிப்பின் இலக்கு என்பது, தாம் விரும்பும் ஒருவரை வெற்றிபெறச்செய்வதுதான். இதில் எவ்வாறான கொள்கை விளக்கங்களை கூறினாலும்கூட, உண்மை இதுதான்.

இந்த பின்புலத்தில், சஜித் பிரேமதாச தோல்விடையவேண்டுமென்றால், வெற்றிபெறப்போவது கோட்டாபய ராஜபக்ஷவே. தேர்தல் பகிஷ்கரிப்பை தெரிவாக முன்வைத்த அனைவருமே, கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியையே விரும்பியிருந்தனர். நாடுகடந்த அரசாங்கம், மக்களவைபோன்ற புலம்பெயர் அமைப்புக்களும் இதனையே விரும்பியிருந்தனர். அதேபோன்று பிறிதொரு பிரிவினர், ‘மதியுரை அறிஞர்கள்’ என்னும் பெயரில், பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துமாறு பிரசாரங்களை முன்னெடுத்திருந்தனர். திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவலும் இதில் ஒருவர்.

ஒரு வேளை, தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டிருந்தாலும்கூட, கோட்டாபய ராஜபக்ஷவோ, இன்னும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருப்பார். சஜித் பிரேமதாச இன்னும் மோசமாக தோல்வியடைந்திருப்பார். ஏனெனில், பொதுவேட்டபாளர் ஒருவர் நிறுத்தப்பட்டிருந்தால், தமிழர்கள் நாட்டை பிரிக்க முற்படுகின்றனர் என்னும் பிரச்சாரத்தை முன்னெடுப்பதற்கு இன்னும் வசதியாகியிருக்கும். சிவாஜிலிங்கத்தை சிங்கள தேசியவாதிகள் பெரிதாக பொருட்படுத்தவில்லை. இதன் காரணமாகவே, பொதுவேட்பாளர் யோசனையை சம்பந்தனும் கூட்டமைப்பும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் அமைவதையே, தீவிர-தமிழ்த் தேசியவாதிகள் விரும்பியிருந்தனர் என்பது வெள்ளிடைமலை. அவ்வாறாயின், அவ்வாறானவர்கள் தற்போது, அரசாங்கத்தை கண்டிப்பதில் ஏதாவது பொருளுண்டா? உண்மையில், அவர்கள் விரும்பியதுதானே தற்போது நடைபெறுகின்றது.

# கொவிட்-19 பெருந்தொற்றின் மூலம் மற்றொரு இன அழிப்பை அரசாங்கம் திட்டமிடுகின்றதா?

## கேள்வி எழுப்புகின்றார் கஜேந்திரகுமார்

*யாழ்ப்பாணம், மே 17*

*“தாயகப் பிரதேசங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வளங்களை தேவைக்கேற்ப வழங்காது தொற்றாளர்கள் அனைத்து இடங்களுக்கும் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாது நடமாடும் அபாய நிலையை அரசு வேண்டுமென்றே தோற்றுவித்துள்ளதா? முள்ளிவாய்க்கால் இன அழிப்பையொத்த இன்னொரு இன அழிப்பு யுத்தத்தை அரசு கொவிட்-19 பெருந்தொற்றின் மூலம் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிட்டுள்ளதா?”*

*இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:*

*“தமிழர் தேசத்தை சிதைக்கும் நோக்கத்துடன் தமிழினத்துக்கு எதிராக அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த இனவழிப்பு யுத்தமானது 2009ம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் அதன் உச்சக்கட்டத்தை அடைந்து தமிழ் இனப் படுகொலையாக சர்வதேசத்தினதும் மனச்சாட்சிக் கதவுகளை உலுக்கியிருந்தது. இவ்வாறு சர்வதேச சட்ட ஏற்பாடுகளுக்கு மாறாகவும் யுத்தநெறிமுறைகளுக்கு முரணாகவும் மனிதத்துவத்துக்கு எதிராகவும் அரசினால் முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கபட்டமையை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தல் வாரம் அதன் 12 ஆம் ஆண்டு நினைவு வாரமாக நினைவுகூரப்படடு வருகின்றது.*

*தமிழின உரிமைப் போராட்டத்தினை பயங்கரவாதமாக சித்தரித்துக்கொண்டு அரசினால் காலம் காலமாக கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளையும், 2009 முள்ளிவாய்க்காலில் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டும், பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டும், இளைஞர்கள், யுவதிகள் என ஆயிரக்கணக்கானோர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும், பல ஆயிரக்கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டும் சுமார் ஒரு லட்சத்து நாற்பத்தாறாயிரத்து எழுநூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் இனவழிப்பு செய்யப்பட்டதை தமிழினம் நினைவுகூரும் நாட்கள் இவையாகும்.*

*இவ்வாறு தமிழர்களின் உரிமைப் போராட்டம் 2009இல் தமிழின அழிப்பு யுத்தம் மூலமாக மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான இனவழிப்பு நீதிக்கான போராட்டத்தினை அடக்கியொடுக்கும் வகையில் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் ஒடுக்குமுறைகளுக்கு அடிபணியாது அவற்றுக்கு எதிராகவும், கட்டமைப்புசார் இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நாம் மக்களை அணிதிரட்டி ஜனநாயக வழிமுறைகளில் போராடிவருவதுடன் அரசினது அனைத்து அச்சுறுத்தல்களையும் தாண்டி முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்கு நீதி வேண்டி ஒவ்வொரு வருடமும் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தலை பொது அமைப்புக்களோடும், மக்களோடும் இணைந்து கூட்டாக முன்னெடுத்தும் வந்துள்ளோம்.*


*தற்போது முழுஉலகையும் உலுக்கிவரும் கொவிட்-19 பேரழிவுப் பெருந்தொற்று அலை, இராணுவ மயப்படுத்தப்பட்ட இலங்கை அரசினது நிர்வாகக் கட்டமைப்பின் இயலாமையினால், முழு இலங்கை மக்களையும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்துவதில் அரசின் தோல்வியினை சுகாதாரத் துறையினர் குற்றஞ் சாட்டிவரும் அதேவேளை, நாட்டில் சடுதியாக கொவிட் மரணங்களும் அதிகரித்துச் செல்வதனால் கொவிட்-19 அலை தொடர்பாக சுகாதாரத்துறையினர் மிகக் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்தும்வருகின்றனர். ஆனால் அரசாங்கமோ கொவிட்-19 அலை காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைகளை மூடிமறைத்து மக்களை தவறாக வழிநடாத்தி வருவதுடன் அரசின் தோல்வியை மூடி மறைக்க, சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைத் விதைத்து தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டி இராணுவ அனுசரணையுடன் இனவாத செயபாடுகளை முன்னெடுத்து வருகிறது.*

*மேலும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்புக்கு பெரும் சவாலாக கொவிட்-19 அலை உருவெடுத்துள்ள நிலையில் இலங்கை அரசினால் முடக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு தாயகப் பிரதேசங்களில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளை பல நாட்கள் கடந்தும் வழங்க முடியாது சுகாதாரத் துறையினர் திண்டாடுகின்றனர். இப்பிரதேசங்களில் பொது மக்களுக்கான தடுப்பூசிகளை அரசு இன்னமும் வழங்கியிருக்கவுமில்லை.*

*இவ்வாறு தொற்று அதிகரித்துள்ள தாயகப் பிரதேசங்களில் பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வளங்களை தேவைக்கேற்ப வழங்காது தொற்றாளர்கள் அனைத்து இடங்களுக்கும் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாது நடமாடும் அபாய நிலையை அரசு வேண்டுமென்றே தமிழர் தாயகப்பிரதேசங்களில் தோற்றுவித்துள்ளதா, முள்ளிவாய்க்கால் இன அழிப்பையொத்த இன்னொரு இன அழிப்பு யுத்தத்தை ஸ்ரீலங்கா அரசு கொவிட்-19 பெருந்தொற்றின் மூலம் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிட்டுள்ளதா என்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியில் வலுவாக எழுந்துள்ளது.*

*இன்றைய நெருக்கடியான சூழலிலும் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவுகூர்வதன் மூலம் 21ம் நூற்றாண்டின் மனிதப் பேரவலத்தை உலகறியச்செய்வதும் அடுத்த தலைமுறைகளுக்கு அதனைக் கடத்துவதும் எமது தலையாய கடமையும் பொறுப்புமாகும். மேலும் கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்துவதில் தோல்வி அடைந்துள்ள அரசு, கொவிட்-19 தொற்றிலிருந்து தமிழ்* **(02 ஆம் பக்கம் பார்க்க)**

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 17 திங்கட்கிழமை
பிலவ வருடம் - வைகாசி - 3
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : சஷ்டி




**மேடம்**
சகிப்புத் தன்மை ஏற்படும். பயணத்திட்டம் தீட்டு வீர்கள். பொழுதுபோக்குகளில் கவனம் செல்லும். எண்ணம் ஒன்று நிறைவேறும்.பழைய பொருள் ஒன்றை மாற்றுவீர்கள். உங்களின் புகழ் கூடும்.

**இடபம்**
சகிப்புத் தன்மை ஏற்படும். பயணத்திட்டம் தீட்டு வீர்கள். பொழுதுபோக்குகளில் கவனம் செல்லும். எண்ணம் ஒன்று நிறைவேறும்.பழைய பொருள் ஒன்றை மாற்றுவீர்கள். உங்களின் புகழ் கூடும்.

**மிதுனம்**
புதிய நபர் ஒருவர் அறிமுகமாவார். வசதிகள் பெருகும். மேலதிகாரி உங்களை மதிப்பார். தகவல் தொடர்பால் நன்மை வரும். யாரைப் பற்றியும் யாரிடமும் கேலி பேச வேண்டாம்.

**கடகம்**
சமூகத்தில் உங்களின் மரியாதை கூடும். பரபரப்பான நாள். பணியில் உள்ள சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**சிம்மம்**
அமோகமான நற்பலன்களைக் காணப்போகும் இனிய நாள். மகிழ்ச்சிகர வாழ்வுமுறை தொடர்ந்திடும். உபரி பணவரவு உண்டு. கவலை குறையும். இளம்பெண்களுக்கு மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
அலுவலக பண விவகாரங்களில் அதிக கவனம் தேவை. கணவன் மனைவி ஒற்றுமையில் நல்ல முன்னேற்றம் உண்டு. உங்களின் கோபத்தை குறைத்துக் கொள்வது நல்லது.

**துலாம்**
உடன் பிறந்தவர்கள் வாழ்வில் இன்று நன்மை நிகழும். பெற்றோர், பெரியவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. இன்று கைமாற்றாக வாங்கிய தொகையை செலுத்துவீர்கள்.

**விருட்சிகம்**
மற்றவர்கள் விவகாரங்களில் தலையிட்டு சிரமப்படாதீர்கள். பணியில் அலட்சியம் காட்டாதீர்கள். தாயாருடன் சண்டை வேண்டாம். நேற்று ஏற்பட்ட மன அழுத்தம் தீரும். நற்செய்தி ஒன்று வரும்.

**தனுசு**
உங்கள் தனிப்பட்ட ரகசியங்கள் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வருத்தம் கொடுத்து வந்த பிரச்னைகள் விலகும். நிம்மதி ஏற்படும். உங்களின் சமயோசித புத்தியை மற்றவர்கள் பாராட்டுவர்.

**மகரம்**
வியாபாரிகளுக்கு அலைச்சலும், மனஅழுத்தமும் நீங்கும். வருமானம் அதிகரிப்பது பற்றிய நல்ல செய்தி வரும். குடும்பத்தில் முன்பு இருந்த மனக் குறைகள் மெல்லத் தீரும்.

**கும்பம்**
ஒருமித்த மனதுடன் பணியாற்றுங்கள். தன்னம்பிக்கை இழக்க வேண்டாம். உங்களுடைய கடமைகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் குறையும்.

**மீனம்**
நடக்காது என்று நினைத்திருந்த விஷயங்கள் இன்று நடக்கும். சில விஷயங்கள் இழுப்பறியாகத் தான் இருக்கும். கவலை வேண்டாம். மனதிற்குப் பிடித்த சில இனிய விஷயங்கள் நடக்கும்.

---

**சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் தொடரும் அவலம்:**

# பிரேத அறையில் இடம் இல்லாததால் வாயிலில் வைக்கப்பட்டுள்ள உடல்கள்

சென்னை, மே 17

சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் பிணவறையில் இடம் இல்லாததால் கொரோனாவால் இறந்தவர்களின் உடல்கள் நுழைவுவாயிலில் கிடத்தி வைக்கப்படும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நோய் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டு உள்ளதாகவும் பொதுமக்கள், ஊழியர்கள் பீதி அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் கொரோனா தொற்றின் 2ஆவது அலை அதிதீவிரமாக பரவி வருகிறது. இதனால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் மிகப் பெரிய உச்சத்தை தொடுகிறது. அதிலும் குறிப்பாக தலைநகர் சென்னை கொரோனாவின் பிடியில் சிக்கி தவிக்கிறது. தினமும் இங்கு 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் அனைத்து அரசு மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளில் படுக்கைகள் நிரம்பி வழிகிறது. பெரும்பாலானோர் படுக்கை வசதி கிடைக்காமல் ஆஸ்பத்திரி வாசல்களிலே தவம் கிடக்கின்றனர். மூச்சுத்திணறலால் ஆம்புலன்ஸ் வாகனங்களில் வரும் நோயாளிகள் பல மணி நேரம் காத்துக்கிடக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இதனால் பலர் ஒக்சிசன் விநியோகம் கிடைக்காமல் அம்புலன்ஸ் வாகனங்களிலேயே உயிரிழக்கின்றனர்.

தற்போது, தமிழகத்தில் தினசரி கொரோனா உயிரிழப்பு 300-ஐ நெருங்கி வருகிறது. கொரோனா தொற்றின் முதல் அலையின்போது கூட, அதிகபட்சமாக 127 என்ற எண்ணிக்கையில் உயிரிழப்பு இருந்தது. தற்போது உயிரிழப்பு 300-ஐ நெருங்கி வருவதால் பல அரசு ஆஸ்பத்திரி பிணவறைகள் இடம் இல்லாமல், உடல்கள் வெளியே வைக்கப்படும் அவலம் ஏற்பட்டு உள்ளது.




தலைநகர் சென்னையில் மட்டும் தினசரி 80 பேருக்குமேல் கொரோனா தொற்றால் உயிரிழக்கின்றனர். அதில் 50 சதவீதம் உயிரிழப்பு சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் நிகழ்கிறது. இந்த ஆஸ்பத்திரியில் ஒரு மணி நேரத்துக்கு குறைந்தது கொரோனாவால் உயிரிழந்த 5 முதல் 7 உடல்கள் அடுத்தடுத்து பிணவறைக்கு கொண்டு செல்லப்படுவதை காணலாம்.

இதனால் தற்போது ராஜீவ் காந்தி அரசு ஆஸ்பத்திரி பிணவறையில் இறந்தவர்களின் உடல்கள் வைக்க இடம் இல்லாமல், பிணவறை நுழைவுவாயில் அருகிலேயே கிடத்தி வைக்கப் படும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. ராஜீவ்காந்தி ஆஸ்பத்திரி பிணவறை 50 முதல் 70 உடல்கள் வைக்கப்படும் அளவுக்கு வசதி இருக்கும். இங்கு சாதாரண நாட்களில் நாள் ஒன்றுக்கு 10 முதல் 15 உடல் கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு வந்தது.

இந்தநிலையில் தற்போது கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்பு அதிகரித்துள்ளதால் ஒரே நாளில் 30-க்கும் மேற்பட்ட உடல்கள் பிணவறைக்கு கொண்டு வரப்படுகிறது. இதனால் பிணவறையில் உடல்கள் வைக்க போதிய இட வசதி இல்லாமல், நுழைவு வாயில் அருகே கிடத்தி வைக்கப்படுகிறது. மேலும், பிணவறையின் வெளியேயும் இறந்தவர்களின் உடல்கள் தரையில் வைக்கப்பட்டுள்ளது. அதே போல், நுழைவுவாயிலுக்கு வெளியே வரிசையாக ஒன்றன் பின் ஒன்றாக கொளுத்தும் வெயிலில் உடல்கள் வைக்கப்பட்டு உள்ளன.

கொரோனாவால் இறந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனை முடித்து கொடுக்க ஒரு நாளுக்கு மேல் ஆவதால் தேங்கி கிடக்கும் உடல்களும் அழுகும் நிலை ஏற்பட்டு உள்ளது. அதேபோல், இறந்தவர்களின் உடல்கள் பிணவறையின் நுழைவுவாயிலில் வைக்கப்படுவதால், அங்கு வரும் இறந்தவர்களின் உறவினர்களுக்கும், பொதுமக்களுக்கும், அங்குள்ள ஊழியர்களுக்கும் கொரோனா தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

---

# கூடுதல் கட்டுப்பாடுகள் அமுல்: பொலிஸார் தீவிர கண்காணிப்பு

சென்னை, மே , 17

தமிழகத்தில் கொரோனா 2ஆவது அலையின் தாக்கம் நாளுக்கு நாள்உச்சம் அடைந்து வருகிறது. தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக கடந்த 10-ஆம் திகதி முதல் வருகிற 24ஆம் திகதி வரை சில தளர்வுகளுடன் முழு ஊரடங்கு கடைப்பிடிக்கப்படுகிறது.

நாளுக்கு நாள் கொரோனா நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பதை கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்தாலும் அதையும் மீறி ஏராளமானோர் வாகனங்களில் வெளியில் சுற்றி வருகிறார்கள்.

இதை கட்டுப்படுத்துவதற்காக தமிழ்நாடு முழுவதும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் கூடுதல் கட்டுப்பாடுகள் அமல் படுத்தப்பட்டன. நேற்று முன்தினம் வரை மதியம் 12 மணி வரை திறக்கப்பட்டிருந்த கடைகள் நேற்று முதல் காலை 10 மணிக்கு அடைக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி நேற்று காலை 6 மணிக்கு திறக்கப்பட்ட கடைகள் 10 மணிக்கு அடைக்கப்பட்டன. காலை 9.55 மணிக்கே போலீசார் ரோந்து சென்று கடைகளை அடைக்குமாறு அறிவுறுத்தி சென்றனர். அதன்படி ஒவ்வொரு கடைக்காரர்களும் காலை 10 மணிக்கு கடைகளை மூடி விட்டனர். நேற்று முதல் தேநீர் கடைகள் திறக்கவும் தடை விதிக்கப்பட்டு இருந்ததால் தெருக்களில் மக்கள் கூட்டம் குறைந்து இருந்தது. தமிழ்நாடு முழுவதும் 5 ஆயி ரம் இடங்களில் பொலிஸார் வாகன சோதனை நடத்தினார்கள். இதில் சென்னை நகரத்தில் மட்டும் 500 இடங்களில் அதிரடியாக வாகன சோதனை நடத்தப்பட்டது. தேவையின்றி சாலைகளில் சுற்றி திரிந்தவர்களை பொலிஸார் கடுமையாக எச்சரித்தனர்.



# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 306 பேர் கைது

கொழும்பு, மே 17

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 306 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டம் அமுலுக்கு வந்த காலப்பகுதி முதல் இதுவரை 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அந்தச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.(இ)

# பயணத்தடைக்கு மத்தியிலும் விபசாரம் 3 பெண்களும், 2 ஆண்களும் மாட்டினர்!

கொழும்பு, மே 17

மொரட்டுவப் பகுதியில் இயங்கிவ ந்த விபசார நிலையமொன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், விபசாரத்தில் ஈடுபட்டு வந்த மூன்று பெண்களையும், அங்கு வந்திருந்த இரு ஆண்களையும் கைது செய்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த 13ஆம் திகதி இரவு முதல் நாடு முழுவதும் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைக்கு மத்தியிலும் மிகவும் சூட்சுமமான முறையில் இவர்கள் விபசாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே பொலிஸார் அவர்களைக் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (இ)

# முழு நேரப் பயணக் கட்டுப்பாடு அதிகாலை நிறைவு; இன்று முதல் இரவு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுல்

## மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடும் மே 31 வரை அமுலில் இருக்கும் என்கிறார் இராணுவத் தளபதி



**கொழும்பு, மே 17**

**இலங்கையில் கடந்த வியாழக்கிழமை இரவு 11 மணி முதல் அமுலுக்கு வந்திருந்த மூன்று நாள் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு இன்று திங்கட்கிழமை அதிகாலை 4 மணி முதல் தளர்த்தப்படும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

அத்துடன் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு அவர் நன்றியையும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக நீண்ட வார இறுதி விடுமுறை என்பதால் கடந்த 13ஆம் திகதி இரவு 11 மணி முதல் 17ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையிலும் மூன்று நாட்களுக்கு முழு நேரப் பயணக் கட்டுப்பாட்டை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி முன்னர் அறிவித்தவாறு இன்று அதிகாலை முதல் அந்த கட்டுப்பாடு நீக்கப்படும்.

எவ்வாறாயினும் முழுநேரப் பயணக் கட்டுப்பாட்டை நீக்கினாலும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள், இரவு நேரப் பயணக் கட்டுப்பாடுகள் (இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணிவரை) மே 31ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும்' - என்றார். (இ)

# மரண அறிவித்தல்

மலர்வு
19 - 06 - 1955



உதிர்வு
13 - 05 - 2021

## திருதங்கராஜா இரத்தினசிகாமணி
### (குட்டிக்கிளி)

உரிமையாளர்- Maneez&Nimmi Restaurant

யாழ். வல்வெட்டித்துறை தீருவிலைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Zurich I வசிப்பிடமாகவும் கொண்டதங்கராஜா இரத்தினசிகாமணி அவர்கள் 13.05.2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களானதங்கராஜா – தங்கமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரைபூபதி அம்மாதம்பதிகளின் அன்புமருமகனும், நிர்மலாதேவி (சக்கரை) அவர்களின் அன்புக் கணவரும், ராஜன்பாபு (தீபன்), நித்தியா,சௌமியாஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ்சன் (சதீஸ்– சுவிஸ்) அவர்களின் அன்புமாமனாரும், S.சாரங்கன், சாயினி ஆகியோரின் அன்புப் பேரனும், தேவசிகாமணி (ஆவுவு மணி–சுவிஸ்),அற்புதசிகாமணி(நீதவான் – லண்டன்),தங்கேஸ்வரி (லண்டன்), பரமேஸ்வரி (திருச்சி இந்தியா), இரத்தினேஸ்வரி (இரத்தினா–லண்டன்), சந்திரேஸ்வரி (கட்டி–சுவிஸ்), காலஞ்சென்ற அமரசிகாமணி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமார்(லண்டன்), வரதராசா(வரதன்), ஜெயராசா(ஜெயம்–சுவிஸ்),கெங்கா(லண்டன்),காலஞ்சென்றவர்களானசிறீஸ்கந்தராசா, இறஞ்சிதமலர்,சுதாகர் ஆகியோரின் அன்புமைத்துனரும், அருண், திவாகர், சுவாதிஆகியோரின் பாசமிகுபெறாதந்தை, கனேஸ்குமார் (கனடா), பிரஷாத்(லண்டன்), அசோக், சேகர், கேசவன், பாபுஜி,வசிகன்,கவிதா, டயானா, சாந்தராஜ் (சாந்து), அமிர்தராஜ் (அம்மு) ஆகியோரின் பாசமிகுமாமனாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**கிரியை**
Tuesday, 18 May 2021 8:00 AM - 12:00 PM
krematoriumNordheim
Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

**தொடர்புகளுக்கு:**
**நிர்மலாதேவி(மனைவி) 0041435409160**
**ராஜன்பாபு (மகன்) 0041793192060**
**நித்தியா (மகள்) 0041788593379**

# மூன்று வாரங்களுக்குள் கொரோனாவுக்கு முடிவு

## மக்களின் ஒத்துழைப்பு வேண்டும் என்கின்றார் இராணுவத் தளபதி

கொழும்பு, மே 17

இலங்கையில் எதிர்வரும் 2 - 3 வாரங்களுக்கு மக்கள் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றிச் செயற்பட்டால் கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்த முடியும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றிய குறைவான அறிகுறிகளை வெளிக்காட்டுக்காட்டும் நோயாளிகளுக்கு வீடுகளில் வைத்த சிகிச்சை அளிப்பது தொடர்பான வழிகாட்டல்களை எதிர்வரும் சில தினங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# பி.சி.ஆர். எடுக்காமல் திருப்பி அனுப்பாதீர்!

## சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இராணுவத் தளபதி கோரிக்கை

கொழும்பு, மே 17

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வருபவர்களிடம் மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பினால், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதியும் கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பிரதேச மருத்துவமனை ஒன்றுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்குச் சென்ற ஒருவரை அங்கு வெளிநோயாளர் பிரிவில் கடமையிலிருந்த மருத்துவர் திருப்பி அனுப்ப முயன்றுள்ளார். தொற்றாளர்களுடன் முதல் நிலை தொடர்பில்லாதவர்கள் பி.சி.ஆர். பரிசோதனை செய்யத் தேவையில்லை என்று காரணம் கூறியுள்ளார்.

தனக்கு அறிகுறிகள் தென்படுவதால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று கூற, வேறு வழியில்லாமல் மாதிரிகள் பெறப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவத் தளபதியிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது, "பி.சி.ஆர். பரிசோதனைக்கு வருபவர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது. இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுமாக இருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம். பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும்.

இதேவேளை நாடு முழுவதும் பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெறும் அதேவேளை, கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன" - என்றார். (இ)

# அத்தியாவசிய வழக்குகளை மட்டும் விசாரிக்கத் தீர்மானம்

கொழும்பு, மே 17

அத்தியாவசிய வழக்குகளை மாத்திரம் திறந்த நீதிமன்றத்தில் விசாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினரோ அல்லது அவர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளோ நகர்த்தல் பத்திரத்தினூடாக விடயங்களை முன்வைக்கும் பட்சத்தில், அதன் அத்தியாவசியம் கருதி மாத்திரம் வழக்கு விசாரணையை முன்னெடுக்கவுள்ளதாக நீதிமன்ற சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏனைய வழக்கு விசாரணைகளை இரு தரப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு அழைப்பு விடுக்காமலே, பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஏனைய நீதிமன்றங்களின் செயல்பாடுகள் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுடன் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில், உயர்நீதிமன்றம் உள்ளிட்ட ஏனைய அனைத்து நீதிமன்றங்களின் நடவடிக்கைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே முன்னெடுக்கப்படவுள்ளதாக நீதிமன்ற சேவை ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

# யாழில் கூழ் காய்ச்சி குடித்த 9 பேர் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், மே 17

காரைநகரில் திருமண சம்பந்த கலப்பு ஒன்றின் பின்னர் கூழ்காய்சிக் குடித்த ஒன்பது பேர் நேற்று தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

காரைநகரில் ஒரு வீட்டில் பலர் சேர்ந்து கூழ் காய்ச்சிக் குடிப்பதாக சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவத்தை அடுத்து அங்கு சென்ற சுகாதார உத்தியோகத்தர்கள், கூழ் காய்ச்சிக் குடித்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேரை அடையாளம் கண்டதுடன் அவர்களை சுய தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பந்தக் கலப்பு ஒன்றின் பின்னரே தாம் கூழ் காய்ச்சியதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இதனிடையே அவர்களிடம் கூழ் வாங்கிப் பருகியதாக பொலிஸார் இருவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மே 18 கறுப்பு ஆடையுடன் சபைக்கு தமிழ் எம்.பிக்கள்!

கொழும்பு, மே 17

**நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் கறுப்பு ஆடையுடன் செல்ல தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளின் எம்.பிக்கள் இந்த முடிவை எடுத்தனர்.**

கடந்த மாதம் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்திற்குள் கறுப்பு ஆடை அணிந்து வந்த சமயத்தில், அதை பார்த்த தமிழ் எம்.பிக்கள், அன்றைய தினமே இந்த முடிவை எடுத்தனர். அன்றைய தினமே கூட்டமைப்பு எம்.பி சிறிதரன், மற்றைய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த யோசனையை சொல்ல, ஏனையவர்கள் அதை ஆமோதித்தனர்.

அண்மையில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், யாரும் தடுக்க முடியாத விதத்தில் அஞ்சலி செலுத்துவோம் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி வாங்குவதற்கு அரசு முயற்சி

## இங்கிலாந்தில் இருந்து பச்சைக்கொடி

கொழும்பு, மே 17

இரண்டாவது டோஸ் வழங்குவதற்காக தேவையான ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராசெனெகா தடுப்பூசிகளைப் வழங்கக் கோரியதற்கு இலங்கைக்கு இங்கிலாந்திலிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தியாவில் பதிவாகும் அதிகளவிலான நோயாளிகள் மற்றும் இறப்புக் காரணமாக சீரம் நிறுவனத்தால் கொவிஷீல்ட் தடுப்பூசிகளை வழங்க முடியாத நிலையில் வேறு தரப்பிடம் இருந்து தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள திட்டமிடுவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்நிலையில் ஒரு மில்லியன் டோஸ் அஸ்ட்ராசெனெகா தடுப்பூசிகளை வழங்குவதற்காக இங்கிலாந்தில் இருந்து நேர்மறையான பதில் கிடைத்ததாகவும் தற்போது இரு அரசாங்கங்களுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவிலிருந்து தேவையான பங்குகளையும் கோரியுள்ளதாகவும் மேலும் கொவிஷீல்ட்டின் முதல் டோஸைப் பெற்றவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி போடுவதற்கான பங்குகளை பெற்றுக்கொள்ள முடிந்தவரை பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தந்த நாடுகளின் முகவர்களுடன் கலந்துரையாடுவதோடு மட்டுமல்லாமல், திறந்த சந்தைகளில் தேவையான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவும் அரசாங்கம் முயற்சி எடுத்துவருவதாக அமைச்சர் கெஹலிய தெரிவித்தார்.

# முல்லைத்தீவு மாணவி மாயம்

முல்லைத்தீவு, மே 17

முல்லைத்தீவில் மாணவியொருவரை காணவில்லையென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முள்ளியவளை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கிறிஸ்துராசா மிதுசிகா (வயது-15) என்பவரை கடந்த 35 நாட்களாக காணவில்லையென உறவினர்களால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சிறுமியை பற்றிய தகவலறிந்தவர்கள் 0766758057 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு தகவலளிக்குமாறு உறவினர்கள் கோரியுள்ளனர்.

# சாவடைந்த கொரோனா நோயாளிகள் இரகசியமாக வீடுகளிலேயே அடக்கம்

## கிண்ணியாவில் இந்த நிலைமை

கிண்ணியா, மே 17

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு வீடுகளிலேயே சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் உயிரிழப்பவர்களை இரகசியமாக அடக்கம் செய்கின்ற சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்றிருக்கின்றன.

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஷ்டப் பிரதேசங்களில் இவ்வாறான சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன என்று திருகோணமலை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் டி. ஜி.எம். கொஸ்தா தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற தகவல்கள் கிடைத்திருக்கின்ற நிலையில் அதன் உண்மைத்தன்மை பற்றி விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிண்ணியா பிரதேசத்தில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, கிண்ணியா, பெரிய கிண்ணியா, குட்டிகரச்சி, எரிதார் நகர், பெரியாத்துமுனை, மாலிந்துரை, ரஹ்மானியா நகர், சின்ன கிண்ணியா, மாஞ்சோலை, குருஞ்சிக்கேணி, முனைச்சேனை உள்ளிட்ட பிரதேசங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (இ)

# மன்னாரில் இதுவரை 400 பேருக்கு தொற்று!

மன்னார், மே 17

மன்னார் மாவட்டத்தில் மேலும் 10 கொரோனா தொற்றாளர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தற்போது வரை 400 கொரோனா தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 728 பீ.சி. ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் யாழ்ப்பாணத்தில் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பீ.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை கிடைக்கப் பெற்றுள்ளன.

அவற்றில் 10 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் மன்னார் பெரியகமம், சாவக்காடு, உப்புக்குளம், பேசாலை போன்ற பகுதிகளை சேர்ந்தவர்கள். அவர்கள் தற்போது சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் 527 பீ.சி.ஆர். பரிசோதனைகளுக்கான முடிவுகள் எதிர் பார்க்கப்பட்டுள்ளது. என தெரிவித்தார்.

மேலும் இந்த வருடம் ஜனவரி தொடக்கம் தற்போது வரை 383 கொரோனா தொற்றாளர்களும், மொத்தமாக 400 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மே மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் தற்போது வரை 41 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 3 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த மாதம் 1288 பீ.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 527 பீ.சி.ஆர். பரிசோதனைகளுக்கான முடிவுகள் எதிர் பார்க்கப்பட்டுள்ளன-என்றார்.

# சிகிச்சை வசதிகளை அதிகரிப்பதற்கு செல்வந்தர்களிடம் கையேந்தும் அரசு

கொழும்பு, மே 17

“இலங்கையில் கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளுக்குத் தேவையான உபகரண வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் செல்வந்தர்களின் உதவிகளை எதிர்பார்க்கின்றோம்.”

- இவ்வாறு கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கும் நிலையில் நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றால் போன்று சிகிச்சையளிப்பதற்கான உபகரணங்களுக்கு மருத்துவமனைகளில் பற்றாக்குறை நிலவுகின்றது.

தற்போதைய நிலைமையில் மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் கட்டில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு கட்டில்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அங்கு சிகிச்சையளிப்பதற்கான சுவாச உதவிக் கருவிகள் உள்ளிட்ட உபகரணங்களையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. இதற்காக நாட்டிலுள்ள செல்வந்தர்கள் உதவ வேண்டும்” - என்றார். (இ)

# 1102 பேர் குணமடைவு

கொழும்பு, மே 17

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1102 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 118,322 ஆக அதிகரித்துள்ளது.

ஈழநாடு



# நைனாமடுப் பகுதியில் ஆக்கிரமிப்புக்கு தயாராகும் தொல்பொருள் திணைக்களம்

வவுனியா, மே. 17

**வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட நைனாமடு கிராமசேவகர் பிரிவின் கோடாலிபறிச்சான் காட்டுப் பகுதியில் விகாரையுடன் தொடர்புடைய இடிபாடுகள் இருப்பதாக தெரிவித்து வவுனியா பிராந்திய தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் அண்மையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**



நைனாமடுவில் அமைந்துள்ள ஒதுக்கப்பட்ட காட்டுப் பகுதியில் சுமார் 8 பாறைக்கோபுரங்களைக் கொண்ட ஒரு கட்டட அமைப்பு, பாறைத்துருவ அடித்தளத்தைக் கொண்ட அமைப்புகள், 5 மீற்றர் உயரமுள்ள தூண் ஆகிய இடிபாடுகளை பார்வையிட்ட ராணுவத்தினர் இது தொடர்பாக தொல்பொருள் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

அதற்கமைய வவுனியா மாவட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளால் குறித்த பகுதி அண்மையில் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக குறித்த பகுதியின் கிராம சேவகருக்கோ, அல்லது கிராம மக்களிற்கோ எந்த தகவலும் தெரியப்படுத்தப்படவில்லை.

அங்கு பௌத்த விகாரையுடன் தொடர்புடைய தொல்பொருள் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தொல்பொருட் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளதுடன், குறித்த பகுதி வர்த்தமானி அறிவுப்பு செய்யப்பட்டு, தொல்பொருள் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் ஆக்கிரமிப்பை ஏற்படுத்தியுள்ள தொல்பொருட் திணைக்களம் தமிழ்மக்களின் பூர்வீக பிரதேசமான நைனாமடுவில் மீண்டும் ஒரு ஆக்கிரமிப்பினை முன்னெடுப்பதற்கு தயாராகிவருகின்றமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.



## கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் தடுப்பூசியைப் பெறவேண்டாம்

*மருத்துவர் சுதத் சமரவீர கோரிக்கை*

கொழும்பு, மே 17

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளக்கூடாது எனத் தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று அறிகுறிகள் உள்ளவர்கள் மற்றும் தொற்று இருக்கலாம் எனச் சந்தேகிப்பவர்களும் கொரோனாத் தொற்று உறுதியானவர்களும் இவ்வாறு கொரோனாத் தடுப்பூசியை போட்டுக்கொள்வதால் எந்தப் பயனும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றியபோதே வைத்தியர் சுதத் சமரவீர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் உடம்பில் ஏற்கனவே கொரோனா வைரஸ் உள்ளமையால் தடுப்பூசி மூலமாக நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்க முடியாது.

எனவே, தற்போது தனிமைப் படுத்தப் பட்டுள்ளவர்களுக்கும் கொரோனாத் தொற்று இருக்கலாம் எனச் சந்தேகிப்பவர்களுக்கும் தடுப்பூசி போடுவதைத் தாமதப்படுத்தியுள்ளோம்.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் அறிகுறி அற்றவர்கள் மற்றும் குறைந்த அறிகுறிகளை காண்பிப்பவர்கள் வைத்தியசாலை மற்றும் தனிமைப் படுத்தல் நிலையங்களில் 10 நாள் வரை தனிமைப்படுத்தப்படுவார்கள். 10முதல்14 நாட்களுக்குள்வைரஸின் தாக்கம் குறைவடைவதுடன், நோயாளியிடமிருந்து ஏனையவர்களுக்குத் தொற்றுப் பரவல் அடைவது முற்றாக நீங்கிவிடும்.

எனவே, 10 நாட்களின் பின்னர் கொரோனாத் தொற்றாளர்கள் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றார்கள். அவர்கள் வீட்டில் மேலும் 4 நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்பு தமது அன்றாட நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுக்க முடியும்" - என்றார். (இ)

# சீரற்ற காலநிலையால் 9 மாவட்டங்கள் பாதிப்பு

*4 மரணங்கள் பதிவு*

கொழும்பு, மே. 17

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 9 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கேகாலை, புத்தளம், கண்டி குருணாகல், காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த 13ஆம் திகதி முதல் இது வரை 11 ஆயிரத்து 796 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 730 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், சீரற்ற காலநிலை காரணமாக 4 மரணங்கள் பதிவாகியுள்ளன என்றும் ஆயிரத்து 247 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, 636 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மழை காரணமாக கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையும் நீடிக்கப்பட்டுள்ளது.

# யாழில் தொற்றுக்கு உள்ளான பெண் இரட்டைக் குழந்தைகள் பிரசவித்தார்!

யாழ்ப்பாணம், மே. 17

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த பெண்ணொருவர் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த நிலையில், தாயும் சேய்களும் நலமாக வீடு திரும்பியுள்ளனர்.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணி பெண் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரட்டை குழந்தைகளை பிரசவித்திருந்தார்.

இந்த நிலையில் தாய்க்கு தொடர்ந்து வைத்தியர்களின் விசேட கண்காணிப்புடன் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. அதேநேரம், பிறந்த குழந்தைகளுக்கு தொற்று ஏற்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் தாய் தொற்றில் இருந்து பூரண குணமடைந்துள்ள நிலையில், நேற்று முன்தினம் தனது இரட்டை குழந்தைகளுடன் வீடு திரும்பியுள்ளார்.

# நோர்வூட் பிரதேச சபை தலைவருக்கு கொரோனா!

*சபை உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர்.*

கொழும்பு, மே. 17

நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் ரவி குழந்தைவேலுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் இவருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இதனால் நோர்வூட் பிரதேச சபைத் தலைவரின் குடும்ப உறுப்பினர் கள் அனைவரும் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. சபை அமர்வில் தவிசாளர் பங்கேற்றுள்ளார். இதனால் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. நோர்வூட் பிரதேச சபையும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 1426 கொரோனா தொற்றாளர்

*19 மரணங்கள் பதிவு*

மட்டக்களப்பு, மே. 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 25 கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அத்தோடு, மூன்று மரணங்களும் பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 15 பேரும் மட்டக்களப்பு சுகாதார பிரிவினை சேர்ந்த 06 பேரும் ஆரையம்பதி மற்றும் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா இருவருமாக 25 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று மரணங்கள் பதிவாகியுள்ளன.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒன்றும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் இரண்டுமாக மூன்று மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 1426 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், இது வரையில் 19 மரணங்களும் பதிவாகியுள்ளன-என்றார்.

# புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு

முல்லைத்தீவு, மே. 17

நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் கொரோனா தொற்று நிலைமை அதிகரித்து வருகின்றது.

அந்தவகையில் மாங்குளம் வைத்தியசாலையின் ஊழியர் ஒருவருக்கு ஏற்பட்ட தொற்றை தொடர்ந்து ஒரு தொகுதியினருக்கும் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை ஊடாக இன்னொரு தொகுதியினருக்கும் கொரோனா தொற்று பரவி வருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மக்களிடையே கடும் அச்சமான சூழ்நிலை நிலவி வருகின்றது.

நேற்று மூன்றாவது நாளாக பயணத்தடை போடப்பட்டிருந்த நிலையில் இன்று மக்கள் நடமாடக்கூடிய வாய்ப்பு உள்ள இடங்களில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முக்கிய நகரங்கள், பேருந்து தரிப்பிடங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றன. முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகர் பகுதி, பேருந்து தரிப்பிடம் மற்றும் திருமுறிகண்டி ஆலய வளாகம் மற்றும் அதனை அண்டிய கடை பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தொற்று நீக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஈழநாடு





# தமிழர்கள் படிக்கவேண்டிய வரலாற்றுப் பாடங்கள்

கலாநிதி அமீரலி

சுதந்திரம் கிடைத்த நாள் தொடக்கம் இன்றுவரை பல சோதனைகளை அரசியல் ரீதியாகச் சந்தித்தவர்கள் இலங்கைத் தமிழர்கள். அந்தச் சோதனைகளின் உச்சமே நடந்து முடிந்த இருபத்தைந்து வருடப் போர் எனலாம். கல்வியே கருந்தனம் என்பதைத் தாரக மந்திரமாகக்கொண்டு வாழ்ந்த, வாழுகின்ற இச்சமூகம் அந்தக் கல்விமூலமும் கடந்த கால அனுபவங்களின் மூலமும் இச்சோதனைகளிலிருந்து எதாவது பாடங்களை கற்றுள்ளார்களா?

வரலாறு ஒரு கண்டிப்பான ஆசிரியன். அவ்வாசிரியன் கற்பிக்கின்ற பாடங்களைப் படிக்க மறந்தாலோ மறுத்தாலோ அவ்வாசான் தரும் தண்ட னைகளிலிருந்து தப்பவே முடியாது. இன்று இலங்கைத் தமிழரின் நிலைமையை நோக்கும்போது வரலாற்றின் தண்டனைகளையே அனுபவிக்கின்றனர்போல் தோன்றுகிறது.

தமிழையே தாய் மொழியாகக்கொண்டு மூன்று சமயங்களைப் பின்பற்றும் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் வாழ்கின்றனர். அவர்களை ஒற்றுமைப் படுத்தி ஒரே அணியில் திரட்ட தமிழுக்கு வலிமை இல்லையா? அண்டை மாநிலமான தமிழ்நாட்டிலே அந்த வலிமை இருக்கும்போது இங்கே அது இல்லாமற்போனதன் இரகசியம் என்ன? தவறு தமிழிலா அல்லது அதைப் பேசுகின்ற மக்களின் குணத்திலா?

முதலாவதாக, பெரும்பான்மையினரின் ஆட்சிக் கர்வத்தினால், இவ்வளவு காலமும் அடிபட்டும் உதைபட்டும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகியும் தாம் ஒன்றுபட வேண்டும் என்ற எண்ணம் இன்னும் தமிழருக்குத் தோன்றாதது ஏனோ? கட்சிப் பிளவு, சாதிப்பிளவு, சமயப் பிளவு, இனப் பிளவு என்று பிரிந்து நின்று போராடியதால்தானே இன்றைக்கு அனாதரவாய் கைகட்டி நிற்கிறீர்கள் என்று வரலாறு அயராது கூறிக்கொண்டிருக்க அந்த உண்மையை இன்னும் உணர மறுப்பதேன்?

தமிழையே தாய் மொழியாகக்கொண்டு மூன்று சமயங்களைப் பின்பற்றும் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் வாழ்கின்றனர். அவர்களை ஒற்றுமைப்படுத்தி ஒரே அணியில் திரட்ட தமிழுக்கு வலிமை இல்லையா? அண்டை மாநிலமான தமிழ்நாட்டிலே அந்த வலிமை இருக்கும்போது இங்கே அது இல்லாமற்போனதன் இரகசியம் என்ன? தவறு தமிழிலா அல்லது அதைப் பேசுகின்ற மக்களின் குணத்திலா? உதாரணமாக, தமிழின் அடிப்படையிலேயே வடக்கும் கிழக்கும் இணைய வேண்டுமெனக் கூச்சலிட்டவர்கள் அதே அடிப்படையில் கல்முனை இரண்டாகப் பிரியவேண்டுமெனக் கதறுவதேனோ? முஸ்லிம்களின் அதிகாரத்தின்கீழ் தாம் வாழ முடியாது என்பதனாலா? 1880களிலிருந்து தமிழ்த் தலைவர்களால் வளர்த்துவிடப்பட்ட இந்த மனோபாவம் என்றுதான் விட்டகலுமோ? தமிழர்களின் மனோ நிலை மாறாதிருக்கும்வரை தமிழினம் பிரிவடைந்தே நிற்கும். அந்தப் பிரிவினால் பெரும்பான்மையினரின் பெரும்பாவங்களுக்குப் பலியாகியே தீருவர்.

இரண்டாவதாக, நாங்கள் பிளவுபட்டிருந்தாலும் தமிழ்நாடு இருக்கும்வரை எங்களை அசைக்க முடியாது என்ற ஒரு பிரேமையில் நீண்டகாலமாக லயித்திருந்துவிட்டு போரில் தோற்றவுடன் ஐயோ கைசேதம் என்று அலறியதை மறந்துவிட்டார்களா? எந்த ஒரு நாடும் அல்லது இனமும் இன்னொரு நாட்டுக்கோ இனத்துக்கோ உதவுவதால் தனக்கு நட்டம்வரும் என உணர்ந்தால் அந்த நாடோ இனமோ என்றுமே உதவப்போவதில்லை. இது வரலாறு உணர்த்தும் இன்னொரு பாடம். இலங்கைத் தமிழரின் பிரச்சினையில் தலையிடுவதால் தமிழ் நாட்டுக்கு நட்டமா இலாபமா என்பதை தமிழ் தலைவர்கள் நடுநிலையில் நின்று என்றாவது எடைபோட்டுப் பார்த்ததுண்டா? சென்னையைவிட புது தில்லி முக்கியம் என்பதையாவது அவர்கள் உணர்ந்தார்களா? அவ்வாறு ஆரம்பத்திலேயே சிந்தித்திருந்தால் அவர்கள் மாற்று வழியொன்றைக் கையாண்டிருப்பர்.

மூன்றாவதாக, பெரும்பான்மையினரின் பெரும்பாவத்தினால் இலங்கைத் தமிழினமொன்று புலம் பெயர்ந்து வாழ்கின்றது. அது அறிவிலும் ஆற்றலிலும் செல்வத்திலும் சிறப்புடன் வாழ்கின்றது. வரலாற்றிலே பல நூற்றாண்களாகப் புலம்பெயர்ந்து வாழ்ந்த இன்னோரினம் தனக்கென ஒரு நாட்டையே உருவாக்கிக் கொண்டதை வரலாறு புகட்டுகின்றது. அந்த இனந்தான் யூதர்கள். யுதர்களுக்கு உலகிலே எந்தக் கோடியிலாவது சொந்தமென்று சொல்லிக்கொள்ள ஒரு துண்டு நிலம்கூட அன்றிருக்கவில்லை. யூதர்களைப்போன்று தமிழரும் ஆற்றலுள்ளவர்களானாலும் தமிழ்நாடென்று ஒன்றிருப்பதால் யூதர்களுக்கிருந்த நிலை இலங்கைத் தமிழர்களுக்கு இல்லை என்பதை உலகறியும். இலங்கைத் தமிழரின் பலம் வெளிநாடுகளில் வளர்வதும் அதனால் இலங்கைத் தமிழர்களுக்காக வெளிநாடுகள், அதிலும் குறிப்பாக மேற்கு நாடுகள் உலக அரங்கில் குரல் கொடுப்பதும் வரவேற்கத் தக்கதே. அனாலும் புலம்பெயர்ந்த தமிழர்களின் அழுத்தம் மட்டும் போதுமா?

இன்று தமிழரைப்போன்று முஸ்லிம்களும் பெரும்பான்மையினரால் இலங்கையில் நசுக்கப்படுகின்றனர். சிங்கள பௌத்த பேரினவாதம் அவர்களையும் தமிழருடன் சேர்த்து கொத்தடிமைகளாக்க நினைக்கிறது. அதனால் புலம்பெயர்ந்த இலங்கை முஸ்லிம் இனமொன்று வெளிநாடுகளில் புதிதாய் முளைவிட்டு வளர்கின்றது. அந்த இனத்தின் அழுத்தத்தினாலேதான் அண்மையில் ஐம்பத்தேழு முஸ்லிம் நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட உலக முஸ்லிம் கூட்டுறவுத்தாபனம் இலங்கை அரசுக்கெதிரான ஒரு பிரேரணையை நிறைவேற்றியது. அது ஐ. நாவின் ஜெனிவாப் பிரேரணைக்கு மேலும் வலிமை அளித்துள்ளதை மறுக்க முடியாது.

இந்த நிலையில் தமிழ் தலைமைத்துவம் ஓர் உண்மையை உணரவேண்டும். அதாவது, மேற்கு நாடுகளின் இலங்கைக்கு எதிரான அழுத்தத்துடன் முஸ்லிம் நாடுகளின் அழுத்தமும் சேர்ந்தால் அந்த மொத்தத் தாக்கத்தை இலங்கை அரசினால் தாங்க முடியுமா? எனவே புலம் பெயர்ந்த தமிழரும் புலம்பெயர்ந்த முஸ்லிம்களும் இணைந்து செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. அதற்கு அடிப்படையாக இலங்கைக்குள் வாழுகின்ற தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து செயற்பட வேண்டியது கட்டாயம். கல்முனைப் பிரச்சினை போன்ற சில்லறைகளை வளரவிட்டால் இந்த ஒற்றுமை சாத்தியமாகுமா?

இதனை ஏன் முஸ்லிம் தலைமைத்துவமும் உணரக்கூடாது என்று ஒரு கேள்வியை எழுப்பலாம். அதில் நியாயமும் உண்டு. ஆனால் ஒரு குடும்பத்தில் மூத்தோன் இருக்க இளையோன் தலையெடுப்பதை குடும்ப மரபு சரிகாணுமா? அது மட்டுமல்லாமல் வரலாற்றிலே தமிழ்த் தலைமைத்துவம் இழைத்த தவறுகளால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட மனக்காயங்கள் இன்னும் ஆறாதிருக்கின்றன. முஸ்லிம்கள் விரும்பினால் எங்களுடன் சேரட்டும், நாங்கள் படி இறங்கி அவர்களிடம் செல்ல மாட்டோம் என்ற ஒரு மனப்போக்கு சில தமிழ்த் தலைவர்களிடையே முளைவிட்டிருப்பதை உணர முடிகின்றது. மேடைகளிலே பேசுவது ஒன்று. நடைமுறையிலே காட்டுவது இன்னொன்று. இந்த நாடகம் இனியும் நீடித்தால் இரு இனங்களுக்குமே ஆபத்து.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை வரலாறு பல உதாரணங்கள் மூலம் புகட்டிக்கொண்டே இருக்கிறது. அதைப் படிக்க மறுக்கும் மாணவர்கள் தண்டனை அனுபவிப்பதைவிட வேறு வழியுண்டா?.

# இஸ்ரேல் – பாலத்தீன சண்டை: இந்தியா ஆதரிப்பது யாரை?



ராகவேந்திர ராவ்

இந்திய வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி. முரளிதரன் மே 11 ஆம் தேதி அன்று தான் செளம்யா சந்தோஷின் குடும்பத்தினருடன் உரையாடியதாகவும் அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததாகவும், சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்க உறுதியளித்திருப்பதாகவும் ட்வீட் செய்திருந்தார்.

கேரளாவைச் சேர்ந்த சந்தோஷ் இஸ்ரேலின் காசா எல்லைக்கு அருகிலுள்ள அஷ்கெலோனில் வீட்டு உதவியாளராகப் பணிபுரிந்து வந்தார். காசாவிலிருந்து ஏவப்பட்ட ஒரு ராக்கெட் தாக்குதல் காரணமாக அவர் உயிரிழந்தார்.

முரளிதரன் தனது ட்வீட்டில், "ஜெருசலேமில் நடந்த இந்த தாக்குதல்களையும் வன்முறைகளையும் நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம். இரு தரப்பினரும் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார். இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இந்த ட்வீட்டை மறு ட்வீட் செய்திருந்தார்.

இவை தவிர, கடந்த சில நாட்களாக இஸ்ரேலுக்கும் பாலத்தீனர்களுக்கும் இடையே நடந்து வரும் வன்முறைகள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகத்திடம் இருந்து எந்த அறிக்கையும் வரவில்லை.

மத்திய கிழக்கு நாடுகள் தொடர்பான ஐ.நா.பாதுகாப்புக் குழுவின் கலந்துரையாடலின் போது, மே 11 அன்று நடந்த பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில்,ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி டி.எஸ். திருமூர்த்தி, இரு தரப்பினரும் தற்போதுள்ள நிலையைச் சீர்குலைக்க முயல்வதைத் தவிர்க்க வேண்டும் என்றார்.

காசாவிலிருந்து நடந்த ராக்கெட் தாக்குதலைக் கண்டித்த திருமூர்த்தி, எல்லா தரப்பும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவும், பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் எண் 2334 ஐப் பின்பற்ற வேண்டும் என்றும் கூறினார். அமைதிப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் அவர் கூறினார்.

மே 12 அன்று ஐ.நா.பாதுகாப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டத்தில், வன்முறையை, குறிப்பாக காசாவிலிருந்து வந்த ராக்கெட் தாக்குதலை இந்தியா கண்டிக்கிறது என்று அவர் கூறினார். வன்முறையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவதும் சூழலின் அழுத்தத்தைக் குறைப்பதும் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**2334 ஆம் எண் தீர்மானம்**

கிழக்கு ஜெருசலேம் உட்பட 1967 முதல் ஆக்கிரமிக்கப்பட்ட பாலத்தீன பிரதேசத்தில் இஸ்ரேலியக் குடியேற்றங்களை அமைக்க சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடையாது என்று கூறி ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் 2016 இல் 2334 ஆம் எண் தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தக் குடியேற்றங்களை நிறுவுவது சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு பெரிய விதி மீறல் என்றும் இந்த திட்டத்தில் கூறப்பட்டது.

பாலத்தீன மக்கள் மீதான இந்தியாவின் கொள்கை அனுதாபத்தின் அடிப்படையில் தான் இருந்து வருகிறது என்பது வரலாறு கூறும் உண்மையானாலும், கடந்த சில ஆண்டுகளாக, இஸ்ரேலுடனான இந்தியாவின் நெருக்கமும் அதிகரித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் பாலத்தீனத்துக்கும் இடையிலான வன்முறை இந்தியாவுக்கு குழப்பமான சூழ்நிலையை உருவாக்கி வருகிறது என்பது தெளிவாகிறது.

செப்டம்பர் 17, 1950 அன்று இந்தியா இஸ்ரேலை அங்கீகரித்தது. அதைத் தொடர்ந்து, யூத நிறுவனம் பம்பாயில் குடிப்பெயர்வு அலுவலகத்தை அமைத்தது. பின்னர் இது வர்த்தக அலுவலகமாகவும் பின்னர் தூதரகமாகவும் மாற்றப்பட்டது. 1992 இல், இரு நாடுகளிடையே முழு ராஜீய உறவுகள் தொடங்கப்பட்டபோது, இரு நாடுகளிலும் தூதரகங்கள் திறக்கப்பட்டன.

1992இல் இரு தரப்பு உறவு அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறியதிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு மற்றும் விவசாயத்தில் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு பல துறைகளிலும் விரிவடைந்துள்ளது.

70 ஆண்டுகளில், இஸ்ரேலுக்கு பயணம் செய்யும் முதல் இந்தியப் பிரதமர் என்ற பெயரை ஜூலை 2017 இல், நரேந்திர மோதி பெற்றார். இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மோடியின் வருகையைப் பெருமைக்குரியது என்று வர்ணித்திருந்தார். இரு நாடுகளும் விண்வெளி, நீர் மேலாண்மை, எரிசக்தி மற்றும் விவசாயம் போன்ற முக்கிய துறைகளில் ஏழு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.

நெத்தன்யாகு 2018 ஜனவரியில் இந்தியாவுக்கு வருகை தந்தார். அப்போது, இணையப் பாதுகாப்பு, எண்ணெய் மற்றும் எரிவாயு ஒத்துழைப்பு, திரைப்பட இணை உற்பத்தி மற்றும் விமான போக்குவரத்து ஆகியவை தொடர்பாக அரசு ஒப்பந்தங்களும் ஐந்து அரசு சார் ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின.

இந்தப் பயணங்களுக்கு முன்னர், 2015-ல் அப்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இஸ்ரேலுக்கு பயணம் செய்தார். அதைத் தொடர்ந்து, இஸ்ரேல் அதிபர் ரூபன் ரிவ்லின் 2016 இல் இந்தியா வந்தார்.

**பாலத்தீன விவகாரத்துக்கு ஆதரவு**

பாலத்தீன பிரச்சினைக்கு இந்தியாவின் ஆதரவு நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாகும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறுகிறது. 1974 ஆம் ஆண்டில், பாலத்தீன விடுதலை அமைப்பை பாலத்தீன மக்களின் ஒரே மற்றும் நியாயமான பிரதிநிதியாக அங்கீகரித்த முதல் அரபு அல்லாத நாடாக விளங்கியது இந்தியா.

> "இந்தியா, இஸ்ரேலில் இருந்து பெருமளவில் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்து வருகிறது. மேலும், இரு நாடுகளின் படைகளுக்கும் இடையே வழக்கமான பரிமாற்றங்களும் நடைபெறுகின்றன. பாதுகாப்பு விஷயங்களில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்படுகின்றன. இரு நாடுகளுக்கும் இடையே ஒரு கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு பணிக்குழுவும் உள்ளது."

1988 ஆம் ஆண்டில், பாலத்தீன நாட்டை அங்கீகரித்த முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. 1996 ஆம் ஆண்டில் இந்தியா காசாவில் தனது பிரதிநிதி அலுவலகத்தைத் திறந்தது, பின்னர் அது 2003 இல் ரமல்லாவிற்கு மாற்றப்பட்டது.

பல பலதரப்பு மன்றங்களில், பாலத்தீன பிரச்னையை ஆதரிப்பதில் இந்தியா ஒரு முக்கியப் பங்காற்றியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் 53 ஆவது அமர்வின் போது,பாலத்தீனர்களின் சுயநிர்ணய உரிமை குறித்த வரைவுத் தீர்மானத்தை இந்தியா இணைந்து வழங்கியது மட்டுமல்லாமல், அதற்கு ஆதரவாகவும் வாக்களித்தது.

பிரிவினை சுவர் கட்ட இஸ்ரேல் எடுத்த முடிவை எதிர்த்து 2003 அக்டோபரில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. பொது மன்றத் தீர்மானத்தையும் இந்தியா ஆதரித்தது. 2011 இல், பாலத்தீனம் யுனெஸ்கோவின் முழு உறுப்பினராவதற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது.

ஐக்கிய நாடுகள் சபையில் வாக்களிக்கும் உரிமை இல்லாமல் "உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நாடு" என்ற அந்தஸ்தை பாலத்தீனத்துக்கு வழங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுத் தீர்மானத்தை இந்தியா 2012 இல் இணைந்து முன்மொழிந்தது. இதற்கு ஆதரவாக வாக்களித்தது இந்தியா. செப்டம்பர் 2015 இல், ஐ.நா வளாகத்தில் பாலத்தீனக் கொடியை நிறுவவும் இந்தியா ஆதரவளித்தது.

இந்தியாவுக்கும் பாலத்தீனத்துக்கும் இடையே வழக்கமான உயர் மட்ட இருதரப்புப் பயணங்களும் தொடர்ந்து வருகின்றன.

சர்வதேச மற்றும் இருதரப்பு மட்டத்தில் வலுவான அரசியல் ஆதரவைத் தவிர, பாலத்தீனத்துக்கு இந்தியா பல்வேறு வகையான நிதி உதவிகளையும் வழங்கியுள்ளது. காசா நகரில் உள்ள அல் அசார் பல்கலைக்கழகத்தில் ஜவஹர்லால் நேரு நூலகம் மற்றும் காசாவின் திர் அல்-பலாவில் உள்ள பாலஸ்தீன தொழில்நுட்பக் கல்லூரியில் மகாத்மா காந்தி நூலகம் உள்ளிட்ட மாணவர் செயல்பாட்டு மையங்களை உருவாக்க இந்திய அரசு உதவியுள்ளது. இவை தவிர, பல திட்டங்களை உருவாக்க பாலத்தீனர்களுக்கு இந்தியா உதவி வருகிறது.

பிப்ரவரி 2018 இல், பாலத்தீனத்துக்குப் பயணம் செய்யும் முதல் இந்தியப் பிரதமரானார் நரேந்திர மோடி. பாலத்தீன மக்களின் நலன்களைப் பாதுகாப்பதில் இந்தியா உறுதிபூண்டுள்ளது என்று பாலத்தீனத் தலைவர் மஹ்மூத் அப்பாஸுக்கு உறுதியளித்ததாக மோடி அப்போது கூறினார். "பாலத்தீனப் பிரதேசம் ஒரு இறையாண்மை கொண்ட, அமைதியான சுதந்திரமான நாடாகும் என்று இந்தியா நம்புகிறது" என்றும் கூறியிருந்தார்.

**இந்தியாவின் குழப்ப நிலை**

பேராசிரியர் ஹர்ஷ் வி பந்த் புது தில்லியில் உள்ள அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளையின் தந்திரோபாய ஆய்வுகள் திட்டத்தின் தலைவராக உள்ளார். "இந்தியா எப்போதுமே பாலத்தீனர்களைப் பகிரங்கமாக ஆதரித்து வந்துள்ளது. ஆனால் திரைக்குப் பின்னால், இஸ்ரேலுடன் நல்லுறவையும் பேணி வந்துள்ளது" என்று அவர் கூறுகிறார்.

"பாதுகாப்பு மற்றும் உளவு சார்ந்த துறைகளில் இஸ்ரேலுக்கும் இந்தியாவுக்கும் இடையில் எப்போதுமே திரைமறைவில் ஓர் ஒத்துழைப்பு இருந்து வந்துள்ளது, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இது தான் நிலைமை. ஆனால் இஸ்ரேலுக்கு பகிரங்கமாக ஆதரவளிப்பதில் இந்தியாவுக்கு ஒரு தடை இருந்தது.

அது இந்திய முஸ் லிம்களின் எதிர்வினை என்னவாக இருக்கும், அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்ற கேள்வியே அந்த தடை." என்று அவர் கூறுகிறார்.

1992 ஆம் ஆண்டுக்குப் பிறகு பி.வி. நரசிம்மராவ் அரசாங்கம் இஸ்ரேலுடனான ராஜீய உறவுகளை முறைப்படுத்திய பின்னர் இந்தியா இஸ்ரேலுடனான தனது உறவை பகிரங்கமாக நீட்டித்தது என்று கூறுகிறார் பந்த்.

(11 ஆம் பக்கம் பார்க்க....)

ஈழநாடு

# புலமைச் சிகரம் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 3
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

கல்வி tv CHANNEL

## இல -2 வினாத்தாள் - II விடைகள்

14) காலை வணக்கம் — 1 புள்ளிகள்

15) அய்யா கிரி பொன்ன — 1 புள்ளிகள்

16) * முதல் மூன்று வாக்கியங்களுக்கும் 2 புள்ளிகள் வீதம் 6 புள்ளிகள் வழங்கப்படும்.
* எழுவாய்,பயனிலை தொடர்பு எடுத்துக்கூட்டல் பிழையிருப்பின் புள்ளி வழங்கப்பட மாட்டாது.
* ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துப்பிழை மட்டுமெனின் 1 புள்ளி வழங்குக. அதற்கு மேல் எனின் புள்ளி வழங்க வேண்டாம்.
1. இலவசப் பாடநூலுக்கு புதிதாக உறையிட்டு எனது பெயரை உறையின் மீது எழுதுவேன்.
2. புத்தகப்பக்கங்கள் கிழித்தல் , மடித்தல், எழுதுதல் போன்றவற்றைத் தவிர்த்து அதனைப் பாதுகாப்பேன்.
3. புத்தகத்தை அழுக்கான இடத்தில் வைக்காது உரிய இடத்தில் ஒழுங்காக அடுக்கி வைப்பேன். — 6 புள்ளிகள்

போன்ற வாக்கியங்களாக இருக்கும் பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்கலாம்.

17) பத்தொன்பதாயிரத்து எண்ணூற்றுப் பதின்மூன்று
18) 24 , 27
19) i. 4 , 4, 6
ii. 5, 5, 8
20) 0.3
21) i. 10:15 மணித்தியாலம்
ii. பி.ப 2.50 / 14:50 மணித்தியாலங்கள்
22) i. 10
ii. 10
23) 80
24) 8l 225ml / 8225ml
25) 18, 36, 42
26) i. 1/3 / 8/24
ii. 3
27) i. 375 சதுர சென்ரிமீற்றர்
ii. 10cm
28) 634
29) 3m 80cm
30) i. 4 கட்டடத்திற்கு நிழற்றுக.
ii. 40


14x2 = 28 புள்ளிகள்


| | | | |
|---|---|---|---|
| 31. 2 | 39. 1 | 47. 1 | 55. 2 |
| 32. 3 | 40. 1 | 48. 1 | 56. 3 |
| 33. 3 | 41. 3 | 49. 1 | 57. 2 |
| 34. 4 | 42. 4 | 50. 1 | 58. 3 |
| 35. 3 | 43. 3 | 51. 2 | 59. 1 |
| 36. 3 | 44. 2 | 52. 4 | 60. 2 |
| 37. 1 | 45. 4 | 53. 4 | |
| 38. 3 | 46. 3 | 54. 4 | |

31x1 = 30 புள்ளிகள்


* முழுவிடைத்தாளையும் கவனத்திற்கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும், சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் 02 புள்ளிகள் வழங்குக.


* பின்வருவனவற்றுள் இரண்டு உருவங்கள் ஒத்த தன்மையுடையவை. ஒன்று மட்டும் வேறுபட்ட தன்மையுடையது. வேறுபட்ட தன்மையுடைய விடையின் கீழ் கோடிடுக.

01. 
1 2 3

02. 
1 2 3

* மிகக் குறைந்த தொடர்புள்ள உருச்சோடிகளைத் தெரிவு செய்க.

03. 
1 2 3

04. 
1 2 3

05. நான் ஓர் ஆணாவேன். முரளியின் மகன் எனது மகளின் தந்தை எனின் முரளி ஆனவர் எனக்கு

01. சகோதரன் 02. சிற்றப்பா 03. தந்தை

06. 24 ÷ 8 x 7 தரப்பட்டுள்ள கணிதச் செய்கையில் பெறத்தக்க விடைக்குச் சமனான விடையாக வரக்கூடிய கணிதச் செய்கையைத் தெரிவு செய்க.

01. 14 ÷ 2 x 3 02. 3 x 5 ÷ 3 03. 21 ÷ 3 x 2


07. 600 இன் அரைவாசியின் 1/4 பங்குடன் 25 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

01. 150 02. 200 03. 100

08. கடலில் நிதமும் இருப்பவை

01. அலையும் மீனும் 02. மீன்களும் நீரும் 03. நீரும் உப்புச் சுவையும்

* 9 ஆம் வினாவுக்கு பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.

09. 


01. 500ml 02. 400ml 03. 800ml

# கொல்லப்பட்ட உறவுகளை நினைவு கூர்ந்து விடுதலை உணர்வை வெளிப்படுத்துவோம்

## வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அழைப்பு

யாழ்ப்பாணம் மே 17



**"எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு எமது இல்லங்கள் ஒவ்வொன்றிலும் பகிரங்கமாக தீபங்கள் ஏற்றி அநியா மாக கொல்லப்பட்ட எமது உறவுகள் அனைவரையும் நினைவு கூர்ந்து வணங்கி எமது தணியாத விடுதலை உணர்வை வெளிப்படுத்தி நிற்போம்" என அழைப்பு விடுத்துள்ளார் வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.**

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"ஒவ்வொரு ஆண்டும் மே 18 என்பது சிங்கள இனவெறி அரசாங்கத்தின் தமிழின இன அழிப்பின் உச்சம் தொட்ட முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நாளாகும் மனிதர்கள் கொல்லப்பட்டாலும் வரலாறு கொல்லப்பட முடியாதது என்பதை நினைவு கொள்ளும் நாளாகும்.

2010 ஆம் ஆண்டு முதல் இனவெறி அரசாங்கங்களின் தடைக்கள் இடையூறுகள் எல்லாவற்றையும் மீறியும் தாண்டியும் நாம் எல்லோரும் பல்வேறு வழிகளில் இந்நாளை நினைவு கூர்ந்தே வந்திருக்கிறோம் இதன்ஒரு அடையாளமாகவே முள்ளிவாய்க்கால் மண்ணில் எளிமையான நினைவுத்தூபி நிறுவப்பட்டது

நினைவேந்தல் நிகழ்வுகளை தடுத்து வந்த அரசாங்கம் இப்பொழுது அந்த நினைவு தூபியையும் இரவோடு இரவாக இடித்தழித்து விட்டு அப்படி ஒரு தேவை இராணுவத்துக்கு இல்லை என்கிறது.

முள்ளிவாய்க்கால் பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமித்து நின்று கொண்டு நினைவுத்தூபி அழித்தது பற்றி தமக்கு தெரியாது என்கின்றனர். கல்லாலும் மண்ணாலும் சிமேந்தாலும் அமைந்த நினைவுத்தூபியை அழிக்கலாம் ஆனால்கல்லுப்போல ஒவ்வொரு தமிழன் மனதிலும் ஆழ பதிந்த நினைவை, வரலாற்றை எமது இனம் இருக்கும் வரை அளிக்க முடியாது . இதனை இனவாத சிங்கள தேசம் புரிந்த கொள்ள வேண்டும்

நிகழ்கால அரசாங்கம் பதவிக்கு வந்த சென்ற ஆண்டு முதல் கட்டவிழ்த்து விடப்பட்ட கடும்போக்குத் தனம் எம் இனத்தை தளர்வடைய செய்ய மாட்டாது என்பதை சென்ற ஆண்டிலும் நிரூபித்தோம் அதே போன்று இந்த வருடமும் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு எமது இல்லங்கள் ஒவ்வொன்றிலும் பகிரங்கமாக தீபங்கள் ஏற்றி அநியாமாக கொல்லப்பட்ட எமது உறவுகள் அனைவரையும் நினைவு கூர்ந்து வணங்கி எமது தணியாத விடுதலை உணர்வை வெளிப்படுத்தி நிற்ப்போம்.

# கொரோனா தடுப்பூசி விரைவில் நாடளாவிய ரீதியில் வழங்கல்

## நாமல் ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, மே 17

கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் விரைவில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கலில் இதுவரை இடம்பெற்ற தவறுகளை திருத்திக்கொண்டு நாடளாவிய ரீதியில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்களுடன் நெருங்கிப் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் விரைவில் இடம்பெறும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

# சீனாவை திருப்திப்படுத்தவே அரசாங்கம் முயற்சிக்கின்றது!

## குற்றஞ்சாட்டுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மே 17

கொழும்பு துறைமுக நகர சட்டமூலத்தின் மூலம் அரசாங்கம் சீனாவை திருப்திப்படுத்த முயல்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

உத்தேச கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தினை துரிதமாக நிறைவேற்றுவதன் மூலம் அரசாங்கம் சீனாவை திருப்திப்படுத்த முயல்கின்றது என அவர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக இந்து சமுத்திரத்தில் இலங்கை வல்லரசுகளின் இரையாக மாறும் எனவும் அவர் எச்சரித்தார்.

சீன பாதுகாப்பு அமைச்சர் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ள நிலையில் அரசாங்கம் அவசர அவசரமாக சட்டமூலத்தை நிறைவேற்ற முயல்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடுஆகியவற்றிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் என எச்சரித்த அவர், நாடு கொரோனா வைரசினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் எதற்கு முன்னுரிமை அளிக்கின்றது என அவர் கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

# இஸ்ரேல் - பாலத்தீன சண்டை....

**(09 ஆம் பக்கத் தொடர்ச்சி....)**

நரேந்திர மோதிதான் இஸ்ரேலுக்குப் பயணம் செய்த முதல் இந்தியப் பிரதமர் என்றாலும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைப் பொருத்தவரை, அந்த உறவு பல ஆண்டுகளாக இருந்தது என்று பந்த் கூறுகிறார். "கார்கில் போர்க் காலத்தில் கூட, இஸ்ரேல் இந்தியாவுடன் உளவுத் துறைத் தகவல் உள்ளிட்ட பல முக்கியமான தகவல்களைப் பகிர்ந்து கொண்டுள்ளது. இந்தியாவுக்கு இஸ்ரேலில் இருந்து பாதுகாப்பு கருவிகள் கிடைத்திருந்ததால், இஸ்ரேல் நீண்ட காலமாக நமது பாதுகாப்புத் துறையில் ஒரு முக்கிய இடத்தில் இருந்து வருகிறது." என்று அவர் கூறுகிறார்.

பாதுகாப்புத் துறை வல்லுநர் சி.உதயபாஸ்கர் இந்தியக் கடற்படையின் ஓய்வு பெற்ற கமோடோர் ஆவார். தற்போது தில்லியைச் சேர்ந்த 'சொசைட்டி ஃபார் பாலிசி ஸ்டடீஸ்' என்ற அமைப்பின் இயக்குநராக உள்ளார்.

இஸ்ரேலுக்கும் பாலத்தீனர்களுக்கும் இடையில் நடந்து வரும் வன்முறைகள் உள்ளிட்ட விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து, "இது மிகவும் நுட்பமான சூழ்நிலை. இந்தியாவைப் பொருத்தவரை இது ஒரு கயிற்றின் மீது நடப்பது போன்றது. வரலாற்று ரீதியாக, பாலத்தீனர்களின் பிரச்னைக்கு இந்தியா ஆதரவளித்து வந்துள்ளது. அணிசேரா இயக்கம் நடை முறையில் இருந்தபோது, யாசர் அராஃபத் தில்லிக்கு வந்திருந்தார். அவருக்குச் சிறப்பான வரவேற்பும் அளிக்கப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் நரசிம்மராவ் பதவிக் காலத்தில் இஸ்ரேலுடனும் ஒரு முறையான உறவை ஏற்படுத்தினோம். இஸ்ரேல் பாலத்தீனம் இடையேயான இந்த விவகாரத்தில் இருதரப்புக்கும் சமநிலையில் ஒரு நிலைப்பாட்டை எடுக்கவே இந்தியா முயற்சி செய்கிறது." என்பது அவரின் கருத்து.

அரசியல் சமநிலையை நிலைநாட்ட இந்தியா எப்போதுமே முயற்சி செய்து வருகிறது என்று பந்த் கூறுகிறார். "மோடி இஸ்ரேலுக்குச் சென்றார், ஆனால் அதன்பிறகு அவர் பாலத்தீனத்துக்கும் சென்றார். இந்த அரசாங்கம் அரபு நாடுகளுடனான உறவை அதிகரித்த விதம் மிகவும் முக்கியமானது. நரசிம்மராவ் அரசு முதல் இப்போது வரை ஒவ்வொரு அரசாங்கமும் சமநிலையை ஏற்படுத்தவே முயன்று வந்துள்ளன. ஆனால் மோடி அரசாங்கம் பகிரங்கமாக செய்ததைப் போல முந்தைய எந்த அரசாங்கம் இஸ்ரேலுக்கு இராஜீய ஆதரவை அளிக்கவில்லை. " என்கிறார் இவர்.

இந்தப் போரில் இந்தியா எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. எனவே அமைதியான தீர்வுக்கு அறைகூவல் விடுவதன் மூலம் இந்தியா ஒரு ஆக்கபூர்வமான நிலைப்பாட்டை எடுக்க முடியும் என்றும் இதை விட வேறு எதுவும் இந்தியா சொல்ல வாய்ப்பில்லை. அங்கு நடப்பது ஒரு வரலாற்றுப் பிரச்னை. இரு தரப்பினருக்கும் அவற்றின் சொந்தத் தேவைகள் உள்ளன. இரு தரப்பினரும் வன்முறையைப் பயன்படுத்துகிறார்கள் என்பது இவர் வாதம்.

இத்தகைய கொடும் வன்முறைச் சம்பவங்களுக்கு இடையிலும் இந்தச் சமநிலையைப் பராமரிக்க இந்தியாவால் முடியுமா? வளைகுடாவின் அரபு நாடுகளே சமநிலை மனப்பான்மையைக் கடைப்பிடிக்க முடியும் போது, இந்தியாவும் அதைச் செய்ய முடியும் என்று பந்த் கூறுகிறார்.

"வாய்ச் சொல்லாக வேண்டுமானால், அரபு நாடுகள் இஸ்ரேல் மீது குறை கூறலாம். ஆனால் சவூதி அரேபியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் இஸ்ரேலுடன் நல்லுறவை வளர்த்து வருகின்றன. கடந்த ஆண்டு நடைபெற்ற ஆபிரகாம் ஒப்பந்தத்தின் மூலம் அரபு நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவாகத் தங்கள் கரங்களை எந்த அளவுக்கு நீட்டியுள்ளன என்பது தெளிவு. பாலத்தீனர்களைப் பொருத்தவரை, வளைகுடாவின் அரபு நாடுகளாலேயே அதைத் தீர்க்க முடியாவிட்டால், அதில் இந்தியா என்ன செய்து விட முடியும்." என்று இவர் கேள்வி எழுப்புகிறார்.

இந்தியா இராஜீய சமநிலையைத் தொடர்ந்து வெற்றிகரமாகக் கடைபிடிக்கும் என்றும் இது மிகவும் எளிதானது என்றும் கூறும் பந்த், இதற்குக் காரணம், இதில் இந்தியாவுக்கு நேரடியாக எந்தப் பங்கும் இல்லை என்பதே என்றும் கூறுகிறார். "இந்தியாவை ஒரு மத்தியஸ்தராகத் தலையிடுமாறு யாரும் கோரவுமில்லை, இந்தியாவும் ஒரு மத்தியஸ்தராக தலையிட விரும்பவுமில்லை" என்று அவர் கூறுகிறார்.

இந்தியா விரும்பினால், அது இஸ்ரேலுக்கு ஆதரவாக பேச முடியும், ஆனால் இந்தியா அவ்வாறு செய்யாது. ஏனெனில் அது மேலும் சிக்கல்களை உருவாக்கும் என்றும் பந்த் கூறுகிறார். "இது மோதி அரசாங்கத்திற்கு ஒரு கடினமான சூழ்நிலை. இந்தியாவின் முஸ்லிம் சமூகம் ஏற்கனவே மோதிக்கு எதிராக உள்ளது" என்று அவர் கூறுகிறார். இந்த விவகாரத்தை வெளியிலிருந்து ஒரு பார்வையாளராக மட்டும் பார்த்தால், ஹமாஸ் ஒரு நாட்டின் வலிமைக்கே சவால் விடுகிறது. ஹமாஸ் சர்வதேசச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அமைப்பன்று. ஆனால், இஸ்ரேல் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நாடு." என்று அவர் கூறுகிறார்.

"ஒவ்வொரு நாடும் சொந்த நலனைக் கருத்தில் கொண்டே இந்த விவகாரத்தைப் பார்க்கிறது. அமெரிக்கா மற்றும் அரபு வளைகுடா நாடுகளைத் தவிர பிற நாடுகளுக்கு இதில் எந்தப் பங்களிப்பும் இல்லை. தீர்வு காண முடியுமென்றால், அது அமெரிக்கா அல்லது அரபு நாடுகளால் மட்டுமே முடியும். அந்த நாடுகளே தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுக்காதபோது, இந்தியாவும் ஒரு சார்பும் இன்றி, சமநிலையைக் கைகொள்ள முடியும்." என்பது இவர் விளக்கம்.

### இந்திய - இஸ்ரேல் உறவு

இந்தியா, இஸ்ரேலில் இருந்து பெருமளவில் பாதுகாப்புத் தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்து வருகிறது. மேலும், இரு நாடுகளின் படைகளுக்கும் இடையே வழக்கமான பரிமாற்றங்களும் நடைபெறுகின்றன. பாதுகாப்பு விஷயங்களில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்படுகின்றன. இரு நாடுகளுக்கும் இடையே ஒரு கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு பணிக்குழுவும் உள்ளது.

பெப்ரவரி 2014 இல் இந்தியாவும் இஸ்ரேலும் மூன்று முக்கியமான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன. இவை, கிரிமினல் வழக்குகளில் பரஸ்பர சட்ட உதவி, உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் உளவுத்துறைத் தகவல் பாதுகாப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையவை.

2015 முதல், இந்தியாவின் ஐ.பி.எஸ் அதிகாரிகள் ஒவ்வோர் ஆண்டும் இஸ்ரேலின் தேசிய பொலிஸ் அகாடமிக்கு ஒரு வாரப் பயிற்சிக்காகச் சென்று வருகின்றனர்.

இஸ்ரேலிய மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு உல்லாசப் பயணங்களுக்கு இந்தியா மிகவும் பிடித்தமான இடம். 2018 ஆம் ஆண்டில், 50,000 க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் இந்தியாவுக்கு வருகை தந்தனர், 70,000 க்கும் மேற்பட்ட இந்திய சுற்றுலாப் பயணிகள் இஸ்ரேலுக்குச் சென்று வந்தனர்.

இந்தியா தொடர்பான பல படிப்புகள் டெல் அவிவ் பல்கலைக்கழகம், ஹீப்ரு பல்கலைக்கழகம் மற்றும் ஹைஃபா பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படுகின்றன.

2019 தரவுகளின்படி, இஸ்ரேலில் சுமார் 550 இந்திய மாணவர்கள் இருந்தனர், அவர்களில் பெரும்பாலோர் முனைவர் மற்றும் அதற்கடுத்த நிலையில் கல்வி பயில்வோர் ஆவர். இந்திய மாணவர்களுக்குக் குறுகிய கால கோடைகால உதவித்தொகையை இஸ்ரேல் வழங்கி வருகிறது. இஸ்ரேலில் சுமார் 14,000 இந்தியக் குடிமக்கள் வாழ்கின்றனர். அவர்களில் சுமார் 13,200 பேர் இஸ்ரேலிய முதியவர்களைப் பராமரிப்பதற்காகப் பணியமர்த்தப்பட் டவர்கள். இது தவிர வைர வணிகர்கள், தகவல் தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளனர்.

மேலும், இஸ்ரேலில் சுமார் 85,000 இந்திய வம்சாவழி யூதர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் இஸ்ரேல் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள். 1950 கள் மற்றும் 1960 களில் இந்தியாவில் இருந்து பலர் இஸ்ரேலுக்குக் குடிபெயர்ந்தனர். இவர்களில் பெரும்பாலோர் மகாராஷ்டிராவிலிருந்தும், மீதமுள்ளவர்கள் கேரளம், மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலிருந்தும் சென்றனர்.

# காசா மீதான தாக்குதல் இன்னும் முடியவில்லை தேவையான வரை இந்தத் தாக்குதல் தொடரும்

## இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடும் எச்சரிக்கை

ஜெருசலம், மே 17

"காசா மீதான தங்கள் தாக்குதல் இன்னும் முடியவில்லை என்றும் தேவை எவ்வளவு உள்ளதோ அதுவரை இந்த தாக்குதல் தொடரும்" என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக இஸ்ரேலிய நாட்டு மக்களிடம் தொலைக்காட்சி வாயிலாக பேசிய பிரதமர் நெதன்யாகு, எங்கள் (இஸ்ரேல்) மீது தாக்குதல் நடத்தியவர்கள் தான் இந்த மோதலுக்கான குற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர நாங்கள் (இஸ்ரேல்) அல்ல எனவும் தெரிவித்தார்.

ஜெருசலேமில் உள்ள அல்-அக்ஷா மத வழிபாட்டு தளத்தில் கடந்த திங்கட்கிழமை இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இதில் இரு தரப்பிலும் பலர் காயமடைந்தனர்.

பாலஸ்தீனர்கள் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசா முனையில் இருந்து ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது ராக்கெட் தாக்குதல் நடத்தியது. இதில் இஸ்ரேலியர்கள் பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதலையடுத்து காசா



முனை மீது இஸ்ரேலிய பாதுகாப்பு படை பதிலடி தாக்குதல் நடத்தியது. இதனால், இரு தரப்புக்கும் இடையே பயங்கர மோதல் வெடித்தது. இரு தரப்பும் மாறிமாறி ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகின்றன.

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலில் இது வரை மொத்தம் 168 பேர் உயிரிழந்துள்ளனர். அதில் காசா முனையில் ஹமாஸ் இயக்கத்தை சேர்ந்தவர்கள் உள்பட 145 பேரும், மேற்கு கரையில் 13 பேரும், இஸ்ரேலில் 10 பேரும்( கேரளாவை சேர்ந்த சௌமியா என்ற பெண் உள்பட) உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், காசா மீதான தங்கள் தாக்குதல் இன்னும் முடியவில்லை என்றும் தேவை எவ்வளவு உள்ளதோ அது வரை இந்த தாக்குதல் தொடரும் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இஸ்ரேலிய நாட்டு மக்களிடம் தொலைக்காட்சி வாயிலாக பேசிய பிரதமர் நெதன்யாகு, எங்கள் (இஸ்ரேல்) மீது தாக்குதல் நடத்தியவர்கள் தான் இந்த மோதலுக்கான குற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர நாங்கள் (இஸ்ரேல்) அல்ல.

காசாவில் உள்ள ஹமாஸ் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தும் மனநிலையிலேயே நாங்கள் இன்னும் உள்ளோம். காசா மீதான தாக்குதல் இன்னும் முடியவில்லை. தேவையான வரை இந்த தாகுதல் தொடரும். பொதுமக்களுக்கு பின்னால் ஒளிந்து கொண்டு பொதுமக்களுக்கு வேண்டுமென்றே தீங்கு இளைக்கும் ஹமாஸ் போன்று இல்லாமல், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அல்லது சிறிய அளவிலேயே பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்டும் வகையில் பயங்கரவாதிகளை நேரடியாக தாக்குகிறோம்" என்றார்.



# இந்தியாவில் ஒரே நாளில் 4,077 பேர் பலி! சுனாமியாகத் தாக்கும் கொரோனா அலை

புதுடெல்லி, மே 17

இந்தியாவில் கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாவது அலை, உலகின் பிற எந்த நாட்டிலும் ஏற்பட்டிராத வகையில் சுனாமி அலைகள் போல தாக்கி வருகிறது. இந்தியாவில் தினமும் 3.5 லட்சத்துக்கும் அதிகமானோரை இந்த கொடிய தொற்று தாக்கி வந்தது இந்த சூழலில் சனிக்கிழமை கொரோனா பாதிப்பு 3.26 லட்சத்தை தாண்டி பதிவாகி இருந்தது.

இந்நிலையில், இந்தியாவில் நேற்று முன்தினம் புதிதாக 3,11,170 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 3 லட்சத்து 11 ஆயிரத்து 170 பேர் கொரோனா பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். இதனால் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2 கோடியே 46 லட்சத்து 84 ஆயிரத்து 077 ஆக உயர்வடைந்து உள்ளது.

கொரோனா பாதிப்பால் நாட்டில் 4,077 பேர் உயிரிழந்து உள்ளனர். இதனால் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 2,70,284 ஆக உயர்ந்து உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 3 லட்சத்து 62 ஆயிரத்து 437 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதனால் மொத்த குணமடைந்தோர் எண்ணிக்கை 2 கோடியே 07 லட்சத்து 95 ஆயிரத்து 335 ஆக உயர்வடைந்து உள்ளது.

கொரோனா பாதிப்பு காரணமாக தற்போது 36,18,458 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். நாட்டில் இதுவரை போடப்பட்ட கொரோனா தடுப்பூசிகளின் எண்ணிக்கை 18 கோடியே 22 லட்சத்து 20 ஆயிரத்து 164 ஆக உள்ளது என்று தெரிவித்து உள்ளது.

இந்தியாவில் இதுவரை 31 கோடியே 48 லட்சத்து 50 ஆயிரத்து 143 கொரோனா பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன என்றும், அதில் நேற்று ஒருநாளில் மட்டும் 18,32,950 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்) தெரிவித்துள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதியின் மூத்த ஆலோசகராக இந்திய வம்சாவளியினரான நீரா நியமனம்

வாஷிங்டன்மே 17

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது நிர்வாகத்தின் சில முக்கிய பொறுப்புகளுக்கு இந்திய வம்சாவளியினரை தேர்வு செய்தார். அந்த வகையில் வெள்ளை மாளிகையின் அதிகாரமிக்க பதவியான மேலாண்மை மற்றும் நிதி குழுவின் தலைவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண்ணான நீரா தாண்டனை நியமிக்க ஜோ பைடன் முடிவு செய்துள்ளார்.

இவரது நியமனத்துக்கு செனட் சபையின் ஒப்புதல் அவசியம் ஆகும். ஆனால் வெள்ளை மாளிகையின் பட்ஜெட் மற்றும் மேலாண்மை இயக்குனராக



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண் நீரா தாண்டனை நியமிப்பதற்கு செனட் சபை எம்.பி. ஜோ மேன்ச்சின் எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் நீரா தாண்டன் நியமனத்தில் சிக்கல் எழுந்தது.

இருப்பினும் வெள்ளை மாளிகையின் நிர்வாக குழுவில் நீரா தாண்டன்இடம்பெறுவார்என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, ஜனாதிபதியின் மூத்த ஆலோசகராக நீரா தாண்டன் நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் மூத்த ஆலோசகராக நீரா தாண்டன் செயல்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியா விதித்த பயணத் தடை முடிவு! இந்தியாவின் விமானம் ஆஸ்திரேலியா சென்றது

மெல்பேர்ன், மே 17

இந்தியாவில் கொரோனாவின் 2ஆவது அலை காட்டுத்தீயாய் பரவத் தொடங்கிய போது அவுஸ்திரேலியா அதிரடியாக விதித்த பயண தடை இப்போது தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்தியாவிலிருந்து முதலாவது விமானம் நேற்று அவுஸ்திரேலியா சென்றுள்ளது.

தடையின் போது அவுஸ்திரேலியர்கள், இந்தியாவில் இருந்து தடையை மீறி நாடு திரும்பினால் 5 ஆண்டு வரை சிறையும், 66 ஆயிரம் அவுஸ்திரேலிய டாலர்கள் வரையில் அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரித்தது. இது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. ஆனால் இந்த பயண தடை நன்றாக வேலை செய்ததாக அவுஸ்திரேலியாவின் பிரதமர் ஸ்காட் மோரீசன் தெரிவித்தார்.

இந்த தடை உத்தரவு முடிவுக்கு வந்த நிலையில் இந்தியாவில் சிக்கித்தவித்த அவுஸ்திரேலியர்களை சொந்த நாட்டில் கொண்டு போய்சேர்ப்பதற்கான முதல் விமானம் தயாரானது. இதில் 150 பேர் பயணிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 80 பேர் மட்டுமே பயணித்தனர்.

எஞ்சியவர்களில் பெரும்பாலோர் கொரோனா தொற்று பாதிப்பு உறுதியானதால் பயணிக்க முடியாமல் போய்விட்டது என இந்தியாவுக்கான அவுஸ்திரேலிய தூதர் பேரி ஓ பேரல் தெரிவித்தார். இந்த விமானம் நேற்று அவுஸ்திரேலியாவின் டார்வின் போய் தரை இறங்கியது.

# மோடி குறித்து அவதூறு சுவரொட்டி ஒட்டியதாக புதுடில்லியில் 17 பேர் கைது!

புதுடில்லி, மே 17

தடுப்பூசி விவகாரத்தில் இந்தியப் பிரதமர் மோடியை அவதூறாக சித்தரித்து புதுடில்லியில் பல இடங்களில் சுவரொட்டியில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. நமது குழந்தைகளுக்கு தேவைப்படும் தடுப்பூசிகளை வெளிநாடுகளுக்கு ஏன் ஏற்றுமதி செய்தீர்கள் என்பன உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் எழுப்பி சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது.

புதுடில்லியில் பல பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த இந்த சுவரொட்டிகளால் தலைநகரில் நேற்று பரபரப்பு நிலவியது. இந்த சுவரொட்டிகள் தொடர்பாக நகரின் பல காவல் நிலையங்களில் புகார் செய்யப்பட்டன. இதைத்தொடர்ந்து இந்த சுவரொட்டிகளை ஒட்டிய 17 பேரை பொலிஸார் கைது செய்தனர். மேலும் இது தொடர்பாக பல காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

சுவரொட்டிகள் அனைத்தும் ஒரே அச்சகத்தில் அச்சிடப்பட்டதா அல்லது ஒருவரோ, அரசியல் கட்சியோ அச்சிட கூறியதா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இலங்கையின் தலைவிதியை தீர்மானிக்கவுள்ள 9 ஆட்டங்கள்



இலங்கை கிரிக்கெட் அணிக்கு மூன்று மாதங்களுக்குள் குறைந்தது மூன்று சுற்றுப் பயணங்கள் தற்சமயம் வரை உறுதியாகியுள்ளன.

ஐ.சி.சி கிரிக்கெட் உலகக் கோப்பை சூப்பர் லீக்கின் ஒரு பகுதியாக இருக்கும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக குசல் ஜானித் பெரேரா தலைமையிலான இலங்கை அணி பங்களா தேஷுக்கு புறப்பட்டது.

இந்த தொடரின் பின்னர் மூன்று ரி-20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் பங்கெடுப்பதற்காக ஜூன் 12 ஆம் திகதி இங்கிலாந்துக்கு புறப்படும்.

எதிர்வரும் ரி-20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்துக்கான ஆயர்த்தமாக முதலில் இங்கிலாந்துடனான ரி-20 தொடரில் விளையாடும் இலங்கை அணி, உலகக் கிண்ண சூப்பர் லீக்கின் ஒரு பகுதியாக இங்கிலாந்துடனான ஒருநாள் தொடரில் முட்டி மோதும்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் முடிந்தவுடன், ஜூலை 13 இந்தியாவுக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள மூன்று ஒருநாள் மற்றும் மூன்று ரி-20 போட்டிக்கு இலங்கை அணி தயாராகும்.

அடுத்த மூன்று மாதங்களில் இலங்கை விளையாடும் இந்த 9 ஒருநாள் போட்டிகள் 2023 உலகக் கிண்ணத்துக்கான இலங்கையின் தகுதிக்கான தலைவிதியை தீர்மானிக்கும்.



## பங்களாதேஷ் சென்றடைந்த இலங்கை அணி

பங்களாதேஷுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கெடுப்பதற்காக நாட்டிலிருந்து வெளியேறிய இலங்கை அணியானது பங்களாதேஷை சென்றடைந்துள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் நிர்வாகம் தனது டுவிட்டர் பக்கத்தில் இலங்கை அணியின் சுற்றுப் பயணத்தை உறுதிப்படுத்தி, புகைப்படங்களை பதிவேற்றியுள்ளது.

## வென்றது ரியல் மட்ரிட்




லா லிகா உதைபந்து தொடரின் க்ரெனடா அணிக்கெதிரான போட்டியில், ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றுள்ளது.

தொடரின் 36ஆவது கட்ட போட்டியாக உள்ளூர் நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை லாஸ் கோர்மென்ஸ் விளையாட்டரங்கில் இப்போட்டி நடைபெற்றது.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், ரியல் மட்ரிட் அணி 4-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் ரியல் மட்ரிட் அணி சார்பில், லுகா மொட்ரிச் 17ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் ரொட்றிகோ 46ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அல்வரோ ஒட்ரிஸோலா 75ஆவது நிமிடத்திலும் ஒரு கோலும் கரிம் பென்ஸிமா 76ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

க்ரெனடா அணி சார்பில், ஜோர்ஜ் மொலினா போட்டியின் 71ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

2020-21ஆம் ஆண்டு பருவக்காலத்துக்கான தரவரிசைப் புள்ளிப்பட்டியலில், ரியல் மட்ரிட் அணி 78 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் க்ரெனடா அணி 45 புள்ளிகளுடன் பத்தாவது இடத்திலும் உள்ளன.




## டோரிஸின் ஹற்றிக் கோலால் மன்செஸ்டர் சிற்றி வெற்றி!

இங்லீஷ் பிரீமியர் லீக் உதைபந்து தொடரின், 36 ஆவது கட்டப் போட்டியில், மன்செஸ்டர் சிற்றி வெற்றி பெற்றுள்ளது.

சென்.ஜேம்ஸ் பார்க் விளையாட்டரங்களில் உள்ளூர் நேரப்படி கடந்த சனிக்கிழமை அதிகாலை நடைபெற்ற இப்போட்டியில், மன்செஸ்டர் சிற்றி அணியும் நியூகாஸ்டல் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், மன்செஸ்டர் சிற்றி 4-3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதில் மன்செஸ்டர் சிற்றி அணி சார்பில், கென்சலோ 39ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் பெர்ரன் டொரிஸ் 42ஆவது 64ஆவது மற்றும் 66ஆவது நிமிடங்களில் என மூன்று கோல்கள் அடித்தார்.

நியூகாஸ்டல் அணி சார்பில், எமில் கிராப்த் 25 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், ஜோலிண்டன் 51ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஒரு கோலும், ஜோ வில்லொக் 62ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

2020-21ஆவது ஆண்டு பருவக்காலத்துக்கான புள்ளிப்பட்டியலில், மன்செஸ்டர் சிற்றி 83 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. நியூகாஸ்டல் அணி 39 புள்ளிகளுடனும் 16ஆவது இடத்தில் உள்ளது.



## நடால்- சிட்ஸிபாஸ் அரையிறுதிக்கு!

இத்தாலி பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டிகளில், ரபேல் நடால் மற்றும் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ் ஆகியோர் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில், ஸ்பெயினின் ரபேல் நடால், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ்வை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், ரபேல் நடால், 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாசுடன் மோதினார்.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், முதல் செற்றை ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ் 6-4 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், 2-1 என்ற செற் கணக்கில் சிட்ஸிபாஸ் முன்னிலைப் பெற்றிருந்த போது, ஜோகோவிச் போட்டியின் இடைநடுவே விலகினார். இதனால் சிட்ஸிபாஸ் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.



## கொவிட்டுக்கு எதிரான போராட்டத்தில் தவானின் மகத்தான பங்களிப்பு

இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான் அரியானா மாநிலத்தின் குருகிராம் பொலிஸாருக்கு கொவிட் -19 உதவிக்காக ஒட்சிசன் செறிவூட்டிகளை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தவான் நன்கொடை அளித்த ஒட்சிசன் செறிவூட்டிகளின் படத்தை குருகிராம் பொலிஸார் தமது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளதுடன், நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

அதற்குப் பதில் அளித்த ஷிகர் தவான், “தற்போதுள்ள கடினமானச் சூழ் நிலையில் இது போன்ற சிறு உதவிகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

என் நாட்டு மக்களுக்கு என்னால் இயன்ற உதவிகளை எப்போதும் செய்யக் காத்திருக்கிறேன்.

இந்த நோய்த் தொற்றுக்கு எதிராக இந்தியா எழுச்சி பெற்று ஜொலிக்கும்” என்று தன் சமூக ஊடகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# அடையாள அட்டை நடைமுறை அமுலாகின்றது இன்று முதல்!

## பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவிப்பு



கொழும்பு, மே17

**வீட்டிலிருந்து வெளியே செல்பவர்களுக்குத் தேசிய அடையாள அட்டை நடைமுறை இன்று முதல் அமுலுக்கு வருகின்றது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் கடந்த 13 ஆம் திகதி இரவு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள தொடர் முழுநேரப் பயணத் தடை இன்று அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்படுகின்றது. இந்தநிலையில், இன்று தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை இரவு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும். இந்த நேரங்களைத் தவிர்த்து ஏனைய நேரங்களில் (அதிகாலை 4 மணி முதல் இரவு 11 மணி வரை) தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலேயே பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியேற முடியும்.

அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பவர்கள், தொழிலுக்குச் செல்லும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு குறித்த காலப்பகுதியில் இந்த நடைமுறை பொருந்தாது. பொருட்கள் கொள்வனவு உட்பட இதர விடயங்களுக்காக வீட்டிலிருந்து வெளியே வருபவர்களுக்கே இந்த நடைமுறை பொருந்தும்.

தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கம் ஒன்றை எண்ணாக இருந்தால் (1,3,5,7,9) ஒன்றை இலக்க நாளில் வெளியே செல்லாம். உதாரணமாக இன்று (17) வெளியில் செல்லாம். இரட்டை இலக்க நாளாக இருந்தால் (2,4,6,8) இரட்டை இலக்க நாளிலே வெளியே செல்லாம். உதாரணமாக நாளை (18) வெளியில் செல்ல முடியும். பூஜ்ஜியம் (0) இலக்கமும் இரட்டை எண்ணாகவே கருதப்படும்.

இதேவேளை, எதிர்வரும் 31ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையும் அமுலில் இருக்கும்" - என்றார். (இ)

# தொற்றாளர்களுக்கு வீட்டில் சிகிச்சையளிக்க வேண்டாம்

### அரசிடம் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மே 17

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு வீட்டில் சிகிச்சையளிப்பது பல பிரச்னைகளைத் தோற்றுவிக்கும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட போதிலும், நோய் அறிகுறிகள் காட்டாத நோயாளர்கள் நாளை முதல் வீட்டிலேயே இருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவர் என்று ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்திருந்தார். இவ்வாறு வீட்டிலிருந்து சிகிச்சை பெறுபவர்கள் கொரோனாக் கட்டுப்பட்டு நிலையத்தால் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்தநிலையில், வீடுகளில் வைத்து சிகிச்சையளிப்பதற்குப் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த யோசனை முன்வைக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் தமது தரப்பிலிருந்து சில கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"வீடுகளில் தனிமைப்படுத்தப்படுகின்றவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

அத்துடன், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் போக்குவரத்துப் பிரச்னைகள் காணப்படுவதோடு, தொடர்ந்தும் பழைய வாகனங்களே பயன்படுத்தப்படுகின்றன.

இதேவேளை, வீடுகளில் தனிமைப்படுத்தப்படுகின்றவர்களுக்கு, அவசர தேவைகளுக்கு வழங்குவதற்கான போதிய மருந்துப் பொருட்களும் வைத்திய அதிகாரி அலுவலகங்களில் இல்லை" - என்றார். (இ)

# கொரோனாவை அரசியலாக்கினால் நாட்டின் நிலைமை மிக மோசமாகும்!

## அரசுக்கு ராதா எம்.பி. எச்சரிக்கை



நுவரெலியா, மே 17

"இலங்கையில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தலைப் பின்பற்றுங்கள். கொரோனாவை அரசியலாக்கப் பார்க்காதீர்கள்."

- இவ்வாறு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன்.

இது தொடர்பாக நேற்று நுவரெலியாவில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியவை வருமாறு:-

"கொரோனாத் தொற்று என்பது சுகாதாரத் துறையினருடன் தொடர்புடைய ஒரு விடயமாகும். எனவே, அதனை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும், என்ன நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும், பொதுமக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் போன்ற விடயங்களை நன்கு அறிந்தவர்கள் சுகாதாரத்துறையினரே. அவர்களுடைய வழிகாட்டலில் ஏனையவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து சுகாதாரத் துறையினரின் வழிகாட்டல்கள் இல்லாமல் இதனைக் கட்டுப்படுத்த முடியாது. கடந்த காலங்களில் எங்களுடைய நாட்டில் ஏற்பட்ட பல தொற்றுநோயைக் கட்டுப்படுத்தியவர்கள் இந்த நாட்டின் சுகாதாரத்துறையினர். எனவே, அவர்களிடம் இதனைக் கையளிப்பதே சிறந்தது.

நாட்டில் போர் இருந்த காலகட்டத்தில் அதனை முப்படையினரே செய்தனர். அதற்கு அவர்களுக்கு ஏனைய தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கினார்கள். போரில் சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளோ அல்லது அவர்களுடைய வழிகாட்டல்களோ இருக்கவில்லை. ஏனெனில் சுகாதாரத்துறையினருக்குப் போர் தொடர்பாக எதுவும் தெரியாது.

எனவே, இந்த அரசு ஆட்சிக்கு வருகின்றபோது கூறிய விடயமே யாருக்கு என்ன திறமை இருக்கின்றதோ அதற்கு ஏற்றவாறு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று. ஆனால், இன்று அது தலைகீழாக நடைபெறுகின்றது. இதனை உணர்ந்து சுகாதாரத்துறையினரிடம் கொரோனாவை ஒழிக்கும் பொறுப்பைக் கையளித்து அவர்களுடைய வழிகாட்டலில் ஏனையவர்கள் சென்றால் மாத்திரமே இந்தத் தொற்றை எமது நாட்டில் இருந்து இல்லாதொழிக்க முடியும். அதனை விடுத்து சுகாதாரத்துறையினருடன் முரண்பாட்டால் இதனைக் கட்டுப்படுத்த முடியாது.

இந்தச் செயற்பாடுகளின்போது ஒவ்வொரு துறையினரும் மாறுபட்ட முரண்பாடான கருத்துகளைக் கூறி வருகின்றார்கள். இதனை நாங்கள் நேரில் பார்க்கின்றோம். சுகாதாரத்துறையினர் ஒரு வழியிலும், பொதுச் சுகாதார அதிகாரிகள் இன்னொரு வழியிலும், பாதுகாப்புப் பிரிவினர் மற்றொறு வழியிலும் சென்றுகொண்டிருக்கின்றார்கள். இப்படிச் சென்றால் இதனைக் கட்டுப்படுத்த முடியாது.

சுகாதாரத்துறையினர் புதுவருட காலத்தில் நாட்டை முழுமையாக முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசைக் கேட்டிருந்தார்கள். அதனை அன்று செய்திருந்தால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அதேநேரம் எங்கள் நாட்டு விமான நிலையத்தை உரிய நேரத்தில் மூடியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

இப்போதாவது சுகாதாரத் துறையினரிடம் முழுமையாக இந்தப் பொறுப்பைக் கையளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இந்த விடயத்தில் அரசியல் செய்யாமல் அனைத்துக் கட்சிகளையும் அழைத்துக் கலந்துரையாடி எதிர்க்கட்சிகளுக்கும் ஒரு பொறுப்பை வழங்கி அனைவருடைய ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள அரசு முன்வரவேண்டும்.

ஏனைய நாடுகளிலும் அந்த நாடுகள் அவ்வாறு செயல்பட்டதன் காரமணாகவே இன்று அவர்கள் கொரோனாவை வெற்றி கொண்டுள்ளார்கள். உடனடியாக இந்த விடயம் தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார். (இ)

# இன்று முதல் அமுலிலுள்ள மேலும் சில நடைமுறைகள்

கொழும்பு, மே 17

இலங்கையில் இன்று முதல் அமுலிலுள்ள மேலும் சில நடைமுறைகளைக் கொரோனா தடுப்புக்கான ஜனாதிபதி செயலணி அறிவித்துள்ளது.

அவை வருமாறு:-

- திருமண நிகழ்வுகளை நடத்த முடியாது. பதிவுத் திருமணம் செய்வதாக இருந்தால் பதிவாளர், சாட்சியாளர்கள் உட்பட 15 பேர் மட்டுமே பங்கேற்க முடியும். வெளியாட்களை அழைக்க முடியாது.
- கொரோனா அல்லாத மரணங்கள் இடம்பெற்றால் இறுதிக்கிரியைகள் 24 மணி நேரத்துக்குள் நடைபெறவேண்டும். 15 பேர் மட்டுமே பங்கேற்க முடியும்.
- பொதுப்போக்குவரத்து சேவையில் ஆசன எண்ணிக்கைகளுக்கு அமைவாக பயணிகளுக்கு அனுமதி. வாடகை வாகனங்களில் சாரதியுடன் இரண்டு பேர் மாத்திரமே பயணிக்க முடியும்.
- அமைச்சின் செயலாளரின் சுற்றுநிருபத்துக்கு அமைவாகவே அரச நிறுவனங்களில் செயல்பாடு.
- தனியார் நிறுவனங்களில் குறைந்தபட்ச ஊழியர்கள் மற்றும் வீட்டிலிருந்து கடமையாற்றும் வசதிகளுடன் பணிகளை முன்னெடுக்கலாம்.
- அவசியக் கூட்டங்கள் 10 பேருடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும். செயலமர்வுகள், மாநாடுகளுக்கு அனுமதியில்லை.
- சில்லறைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், கடைத் தொகுதிகள், சந்தைகள், பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் வங்கிகளின் இட வசதியில் 25 வீதமானோருக்கே அனுமதி.
- பேக்கரி, வீதியோரக் கடைகள், அழகுசாதன நிலையங்களில் இட வசதியின் பிரகாரம் 25 வீதமானோருக்கே உட்பிரவேச அனுமதி.
- பராமரிப்பு நிலையங்கள், பாலர் வகுப்புகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் வகுப்புகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.
- வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள், இரட்டைப் பிரஜாவுரிமையுடையோர், வெளிநாட்டவர்கள், இராஜதந்திரிகள் 14 நாட்கள் தனிமைப் படுத்தலில் இருக்க வேண்டியது கட்டாயம்.
- வெளியே வருபவர்கள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு, சாரதி அனுமதி பத்திரத்தை கைவசம் வைத்திருக்க வேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாதபட்சத்திலேயே கடவுச்சீட்டு, சாரதி அனுமதி பத்திரங்களை பயன்படுத்த முடியும். அதேவேளை, கர்ப்பிணிப் பெண்கள், இருதய நோயாளிகள் உட்பட அத்தியாவசிய தேவை நிமித்தம் வைத்தியசாலைகளுக்குச் செல்பவர்களுக்கும் இந்நடைமுறை பொருந்தாது. (இ)

## முன்னாள்...

தினம் இரவு காலமானார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான அவர், இறக்கும்போது 80 வயதாகும்.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு - சேனையூரில் 1941ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிறந்த அவர், பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றினார். பின்னர், திருகோணமலை பிராந்தியக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், அதனைத் தொடர்ந்து தம்பலகாமம் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் பணியாற்றினார்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக திருகோணமலை மாவட்டத்தில் அவர் போட்டியிட்டார். அதில் அவர் வெற்றி பெறாதபோதும், தேசியப் பட்டியல் உறுப்பினர் மு.சிவசிதம்பரம் உயிரிழந்ததைத் தொடர்ந்து அவருக்குப் பதிலாக 2002ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட துரைரெட்ணசிங்கம், அதில் வெற்றியடைந்து மீண்டும் நாடாளுமன்றம் சென்றார்.

அதன்பின்னர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் அவர் மீண்டும் போட்டியிட்டு அதில் தோல்வியடைந்தபோதும், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பவற்றின் அரசியல் உயர்பீட உறுப்பினரான அவர், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் மூவின சமூகத்துக்கும் சேவை செய்த சிறந்த அரசியல்வாதியாவார். (இ)

## தொற்றாளர்களின்...

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"சாதாரண கணக்கெடுப்பின்படி, ஐந்து, ஆறு தினங்களுக்கிடையே, ஒரு நபர், இரண்டு நபர்களுக்கு தொற்றை ஏற்படுத்துவராயின், ஒவ்வொரு 5 நாட்களுக்கு ஒருமுறையும், நோயாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காகும்.

அவ்வாறு ஏற்பட்டால், 100 நாட்கள் என்ற காலம் நிறைவடையும்போது, 20 தடவைகளுக்கு இந்த எண்ணிக்கை இரு மடங்கானால், நோயாளர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கும் (பத்து இலட்சம்) அதிகளவில் பதிவாகக்கூடும்.

எனவே, கொரோனா வைரஸால் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் அதற்கு உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்கும், சுகாதார வழிகாட்டல்களைத் தவறாது பின்பற்றுவதற்கும் பொதுமக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும்" - என்றார். (இ)

## நினைவேந்தலில்...

அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த 10 பேரை நேற்று செவ்வாய்க் கிழமை கைது செய்து, பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்துவருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வை தலைமைவகித்து செய்திருசந்த லவக்குமார் என்பவருக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டு அவருடைய வீட்டிற்கு 3 தடவைகள் பொலிசார் சென்ற போது அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவரின் மனைவி அதனை பெறமாட்டேன் என தெரிவித்த நிலையில் அவரின் வீட்டின் கதவில் அந்த நீதிமன்ற தடை உத்தரவை பொலிசார் ஒட்டியுள்ளனர்

இந்த நிலையில் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட லவக்குமார் நேற்று பகல் 10 பேருடன் சென்று நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச்சுடர் ஏற்றி அதன் பின்னர் பூக்களை கடலில் தூவினர். இதனை படம் எடுத்து முகநூலில் பதிவேற்றம் செய்த நிலையில் குறித்த 10 பேரையும் அடையாளம் கண்டு அவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை 3 நாள் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியினை பெற்று அவர்களை பொலிஸார் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## யாழ்ப்பாணத்தில்...

இதில், யாழ்ப்பாணம் மாவட்டத்தை சேர்ந்த 95 பேருக்கும், கிளிநொச்சியில் 31 பேருக்கும், வவுனியாவில் 7 பேருக்கும், முல்லைத்தீவில் 4 பேருக்குமாக 137 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில், கரவெட்டி சுகாதார அதிகாரி பிரிவில் 36 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதில் 33 பேர் நெல்லியடி வெதுப்பகம் ஒன்றுடன் தொடர்புபட்டவர்களாவர். அத்துடன் 3 பேர் நெல்லியடி வர்த்தகர்களாவர்.

இதேபோன்று தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 17 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இவர்கள், அந்தோனிபுரம் கிராமத்தில் தனிமைப்படுத்தப்பட்டவர்களாவர்.

தவிர, யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 15 பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும் தொற்று இனங்காணப்பட்டது.

மேலும், யாழ். போதனா வைத்திய சாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்த 8 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கிளிநொச்சியில் கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 31 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் என்றும், சிலர் வீதி திருத்தப் பணிகளில் ஈடுபடுபவர்கள் எனவும் தெரிய வந்தது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்கும், பொது மருத்துவ வைத்தியசாலையில் 2 பேருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. (ஐ)

## 'போர்ட் சிட்டி'...

வர்தன நேற்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தின் சில பிரிவுகள் இலங்கை அரசமைப்புடன் முரண்படுகின்றன என்றும் உயர்நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது.

அரசமைப்புடன் முரண்படும் பகுதிகளைச் சீர்திருத்த முடியுமான விதம் தொடர்பாகவும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு 62 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹார, பிரியன்த ஜயவர்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழாம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டியவை, அத்தோடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் அனுமதி பெறப்பட வேண்டியவை, அதற்காகச் செய்யப்படக் கூடிய மாற்று வழிகள் என்பவை எல்லாம் இந்தத் தீர்ப்பில் உயர்நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (இ)

## வட, கிழக்கில்...

இதேபோன்று, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்தவிடாது தடுக்கும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸார் தடை உத்தரவுகளை பெற்றனர். ஆனால், இந்தத் தடைகள், கண்காணிப்புக்கள் எல்லாவற்றையும் மீறி பொது இடங்களிலும், வீடுகளிலும் மக்கள் உணர்வெழுச்சியுடன் போரில் கொல்லப்பட்ட தங்களின் உறவுகளை நினைவுகூர்ந்தனர்.

பொதுவாக போரில் உறவுகளை இழந்தவர்கள் அவர்களின் திருவுருவப் படங்களை வீடுகளில் வைத்து சுடரேற்றி, மலர் தூவி, படையலிட்டு, கண்ணீர் விட்டு அழுது அவர்களை நினைவுகூர்ந் தனர். இறுதிப் போரை சந்தித்து மீண்ட மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி அதை பகிர்ந்து பருகி நினைவேந்தலை கடைப்பிடித்தனர்.

**முல்லைத்தீவு**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பிரதான நிகழ்வுகள் இறுதிப் போர் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றன. பெரும்பாலான பொது மக்கள் தங்கள் வீடுகளில் நினைவேந்தலை நடத்தினர்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். எனினும், அவர்களின் கண்காணிப்பை தவத்திரு வேலன் சுவாமிகளும் சில பொதுமக்களும் இணைந்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

**நந்திக்கடலில்...**

நந்திக்கடல் பகுதியில் பிரத்தியேக இடமொன்றில் முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பினர் நினைவேந்தலை நடத்தியதுடன் பிரகடனம் ஒன்றையும் வெளியிட்டனர்.

அதில், நினைவுகூரல் என்பது அடிப்படை உரிமை சார்ந்தது மட்டுமல்ல ஈழத் தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட. ஆகவே சிறிலங்கா அரசு ஈழத்தமிழர்களின் நினைவுகூரல் உரிமையை ஒருபோதும் தடுக்க முடியாது, தமிழ் இனப்படுகொலைக்கு நீதிவேண்டி, இனப்படுகொலைக் குற்றவாளிகளை மட்டுமல்ல சிங்கள - பௌத்த அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக பாரப்படுத்த வேண்டும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையிலிருந்து, சிறிலங்காவை ஐ. நா. பொதுச் சபைக்குப் பாரப்படுத்தி தமிழ் இனப்படுகொலையை விசாரிக்க சர்வதேச பொறிமுறை ஒன்றை அமைக்கும்படி கோருகின்றோம், தமிழ் இனப்படுகொலையை அங்கீகரித்து அதன் மீள் நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும், வடக்கு - கிழக்கில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலையை தடுத்து நிறுத்த வேண்டும், சிறிலங்காவின் பல்தேசியத் தன்மையை உறுதிப்படுத்தி தமிழர்கள், தேசத்திற்கு உரித்துடையவர்கள் என்பதோடு தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழர்கள் சுயாட்சிக்கு உரித்துடையவர்கள் என்பதைத் தெரிவிக்கின்றோம், ஈழத்தமிழர்கள் அனைவரும், 'ஈழத் தமிழ்த் தன்மையில்' ஒன்று பட்டு தமிழின விடுதலைக்காக உழைக்க முன்வருவோம் என 7 அம்சங்களை வலியுறுத்தி இருந்தனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் யாழ். பல்கலைக் கழகம், யாழ். ஆயர் இல்லம், இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைமையகம், யாழ். மாநகர சபை, வலி. கிழக்கு பிரதேச சபை மற்றும் அரசியல் கட்சிகளின் அலுவலகங்கள் எனப் பல இடங்களில் நினைவேந்தல்கள் இடம்பெற்றன.

தவிர, இந்து ஆலயங்கள் சிலவற்றிலும், மக்கள் பிரதிநிதிகள் தங்களின் இல்லங்களிலும், பொது மக்கள் தமது வீடுகளில் விளக்கேற்றி இறுதிப் போரில் கொல்லப்பட்ட தங்களின் உறவினர்களை நினைவேந்தினர்.

**ஆயர் இல்லத்தில்...**

ஆயர் இல்லத்தில் நேற்று மாலை 6 மணிக்கு தோவலய மணி ஒலிக்கப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டன. யாழ். ஆயர் ஜஸ்ரின் பேர்ணாட் ஞானபிரகாசம் பிரதான தீபத்தை ஏற்ற அருட்தந்தையர்கள் தீபங்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினர். அத்துடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்டது.

**யாழ். பல்கலைக்கழகத்தில்...**

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நேற்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக சூழலை சுற்றி இராணுவத்தினர், இராணுவப் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும், இராணுவத்தினரின் கடும் கண்காணிப்பையும் மீறி பல்கலைக்கழகத்திற்குள் சென்ற மாணவர்கள் சிலர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் சுடரேற்றி அஞ்சலித்தனர்.

**நவாலியில் தடை...**

முள்ளிவாய்க்கால் படுகொலை நாளான நேற்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் 1995 ஆம் ஆண்டு இராணுவத்தின் விமான தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் பொருட்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் பொது மக்களும் அங்கு சென்றனர். அவரை பொலிஸார் தடுத்து நிறுத்தி திரும்பிப் போக எச்சரித்தனர். அங்கு அஞ்சலிக்க பொலிஸார் தடை ஏற்படுத்திய நிலையில் நவாலி முருகன் ஆலயத்தில் தீபம் ஏற்றி கொல்லப்பட்ட மக்களை அவர்கள் நினைவுகூர்ந்தனர்.

**சிவாஜிலிங்கத்தை**
**கைது செய்ய முயற்சி**

யாழ். நகரில் தமிழராய்ச்சி மாநாடு படுகொலை நினைவு தூபியில் விளக்கேற்றி அஞ்சலித்த முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்துடன் பொலிஸார் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதன் போது அவர், அடையாள அட்டை இலக்க நடைமுறையை பின்பற்றவில்லை என்று கைது செய்ய முனைந்தனர். எனினும், பின்னர் அவரை எச்சரித்து விடுவித்தனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் பொது இடங்கள், தமிழ் அரசு கட்சியின் அலுவலகம் என்பவற்றில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. வழக்கத்திற்கு மாறாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். வீதிகளில் பயணிப்பவர்களை வழிமறித்து அவர்களை சோதனையிட்டனர். அத்துடன் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்ட னர். எனினும் போரில் உறவுகளை இழந்த மக்கள் தமது இல்லங்களில் நினைவு கூர்ந்தனர்.

**வவுனியா, மன்னார்...**

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் ரெலோ கட்சிகளின் அலுவலகங்களிலும் மற்றும் பொது அமைப்புக்கள், மக்களின் வீடுகளில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியாவில் கருமாரி அம்மன் ஆலயத்தில் போரில் கொல்லப்பட்டோரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி பிரார்த்தனையும் விசேட பூசையும் இடம்பெற்றன.

மன்னாரில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டிலும் நினைவேந்தல் இடம்பெற்றது.

**கிழக்கில்...**

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேசமயம், நினைவேந்தல்களை தடுக்கும் பொருட்டு இராணுவமும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேசமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 பொலிஸ் பிரிவுகளில் அஞ்சலி நிகழ்வை முன்னெடுத்த 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

**பாராளுமன்றில்**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான நேற்று பாராளுமன்றத்திலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிர் அஞ்சலி செய்தனர்.

**இணையவழியில்**

கொரோனா தொற்றுப் பேரிடர் காரணமாக இம்முறை இணையவழியிலும் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## மே 24, 25 ஆம்...

திகதிகளையும் விடுமுறை தினங்களாக அறிவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இந்த விடுமுறை வங்கி, வர்த்தக நிறுவனங்களுக்குப் பொருந்தாது என்று பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈழநாடு
Eelanadu

# ரிஷாத், பிரேமலால் விரும்பினால் சபை அமர்வுகளில் பங்கேற்கலாம்

### சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவிப்பு



**கொழும்பு, மே 17,**

**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பி. யுமான ரிஷாத் பதியுதீன் மற்றும் சிறையில் உள்ள அரச தரப்பு எம்.பி. பிரேமலால் ஜெயசேகர ஆகியோர் விரும்பும் பட்சத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் 3 நாட்கள் கூடவுள்ள கூடும் பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்ற அனுமதிக்க முடியுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.**

அத்துடன் இது குறித்த கடிதத்தையும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கும், சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கும் சபாநாயகர் அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மாதத்தின் இறுதி பாராளுமன்ற அமர்வுகள் நாளை 18ஆம் மற்றும் 19ஆம் ,20 ஆம் திகதிகளில் கூடவுள்ள நிலையில் இந்த அமர்வுகளின் போது கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான நீதிமன்ற தீர்ப்பு நாளை சபாநாயகரால் அறிவிக்கப்படவுள்ளதுடன், சட்டமூலமும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இரண்டு நாட்கள் விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்புடன் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பி.யுமான ரிஷாத் பதியுதீன் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள விரும்பும் பட்சத்தில் மாத்திரம் பாராளுமன்ற சிறப்புரிமைகள் சட்டம் மற்றும் பாராளுமன்ற அதிகாரத்தை பயன்படுத்தி அவரை சபை அமர்வுகளில் பங்குபற்ற அனுமதிக்க முடியுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

எனினும் அவர் சபைக்கு வருவதாயின் தற்போது கடைப்பிடிக்கப்படும் கொரோனா சுகாதார கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய பங்குபற்ற வேண்டும் எனவும், அது குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் சபாநாயகர் அறிவித்துள்ளதுடன்,அனுமதி தொடர்பிலான சபாநாயகரின் எழுத்துமூல கடிதம் நேற்று ஞாயிற்றுக்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கொலைக்குற்றச்சாட்டில் மரண தண்டனை வழங்கப்பட்ட நிலையில் மேன்முறையீடு செய்துள்ள சிறைக்கைதியான அரச தரப்பின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகரவும் விருப்பம் தெரிவித்தால் இந்த வாரம் கூடவிருக்கும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் பங்குபற்ற அனுமதிக்க முடியுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவரும் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய சபை அமர்வுகளில் பங்குபற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளதுடன் அவருக்கான சபாநாயகரின் எழுத்து மூலமாக கடிதமும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## கொரோனா வைரஸ் தொற்றால் 4ஆவது கர்ப்பிணிப் பெண் சாவு

*கொழும்பு, மே 17*

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் ஒரு கர்ப்பவதி உயரிழந்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மாலேபே நெவில் பெர்ணான்டோ மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று மருந்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த நான்காவது கர்ப்பவதி பெண் இவர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ)

## தடுப்பூசி வழங்குவதில் பௌத்த மதகுருமாருக்கு முன்னுரிமை

### அஸ்கிரிய பீட தேரர் வலியுறுத்து

*கொழும்பு, மே 17*

கொரோனா தடுப்பூசியை வழங்குவதில் பௌத்தமத குருமாருக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என பௌத்தமதகுரு ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பௌத்த மதகுருமார் மத மற்றும் சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதால் அவர்களிற்கான விசேட முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசியை வழங்கவேண்டும் என அஸ்கிரிய பீடத்தை சேர்ந்த மெதகம தம்மானந்த தேரர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பௌத்தசாசன அமைச்சு இந்த விடயத்தில் தலையிட்டு உடனடியாக பௌத்தமதகுருமாருக்கு தடுப்பூசியை வழங்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். பல பௌத்தமதகுருமார் கொரோனாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தள்ளார்.

## அடுத்த 2 வாரங்களில் கம்பஹா நெருக்கடியை எதிர்கொள்ளும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

*கொழும்பு, மே 17,*

அடுத்த இரண்டு வாரங்களில் கம்பஹா மாவட்டம் நெருக்கடியான நிலைமையை எதிர்கொள்ளும் என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களில் கம்பஹாவில் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் சான் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு மருத்துவமனைக்கு வெள்ளிக்கிழமை கிசிச்சைக்காக வந்தவர்களை பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தியதில் 80 வீதமானவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியான நிலைமைக்கு மத்தியில் கம்பஹா மாவட்டத்தின் மருத்துவமனைகள் செயல் இழக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் உள்ள மருத்துவர்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து நாளாந்த அறிக்கைகளை பெறுவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜனாதிபதிக்கு இந்த அவசர நிலை குறித்து அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு ''துறைமுக நகர்' தீர்ப்பு சபையில் நாளை அறிவிப்பு

*கொழும்பு, மே 17*

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாளை செவ்வாய்க்கிழமை காலை சபையில் அறிவிக்கவுள்ளார்.

அத்துடன்,நாளை செவ்வாய்க்கிழமை 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை மூன்று நாட்கள் பாராளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்கு அண்மையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனதலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்களில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக தெரிவித்தார்.

கொவிட் 19 சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய பாராளுமன்ற அமர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இதற்கமைய 19 ஆம் திகதி விவாதம் முற்பகல் 10.00 மணி முதல் 5.30 மணி வரையும்,20ஆம் திகதி விவாதம் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 4.30 வரையும் நடத்தப்படவுள்ளது.

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | உதிர்வு |
|---|---|---|
| 19 - 10 - 1992 |  | 12 - 05 - 2021 |

### சுதர்சன் ஜெயகாந்தன்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுதர்சன் ஜெயகாந்தன் அவர்கள் 12-05-2021 புதன்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், சவரியப்பன் - சகுந்தலா தம்பதியரின் அன்புப் பேரனும், கண்ணன் (வவுனியா கண்ணன் ரிங்கர் கராஜ் உரிமையாளர்) - கதிசாபீபி தம்பதியரின் அன்பு மகனும்,றஞ்சித், ஆகாஸ், விதுஷன், சாகித்தியா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயராஜ் டான்ஷி, ஜெயரூபன், விஜிதா ஆகியோரின் பெறாமகனும், ராஜா கௌரி அவர்களின் அன்பு மருமகனும், ராஜ்குமார், நிஷா, ஈழவேந்தன், சோபா ஆகியோரின் அன்பு மச்சானும், விஜிதன், வர்சன், சோபியன், சாம்சன், அற்றிக், கினித்தா ஆகியோரின் அன்பு அண்ணனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**விஜிதா - சித்தி** : +16478612293
**ரூபன் - சித்தப்பா** : +16479652293
**ஆகாஷ் - சகோதரன்** : +16476133485

**தகவல்:**
**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் :
திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
(மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஆதலால்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயில் ரைம்
06.30 மணி : நலந்தானா-கண்,காது,பல் வைத்திய
நிபுணர்-பா.திருமாறன்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு